Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

(C/752)

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 23 திங்கட்கிழமை (06.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 250



சீனாவுக்கு முதலாவது கிராண்ட்ஸ்லாம் 07



ஆணையாளர் மீதும் குற்றச்சாட்டு 08



விடுமுறை வரை கனிமொழி சிறையில் 12



ஆணிலிருந்து பெண்ணாக 11



# ஜெயலலிதா உறவை நாடுகிறது கொழும்பு



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக அண்மையில் நியமிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மிகவும் நெருங்கிய ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவின் உதவியுடனேயே மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சரை சந்தித்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியுடன் இணைவு அது அப்பட்டமான பொய்!

### மாநகரசபை உறுப்பினர் றெமீடியஸ் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகரசபை உறுப்பினரான முடியப்பு றெமீடியஸ் அரசாங்கத்தின் பக்கம் தாவினார் என நேற்றையதினம் வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென அவர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேற்று முன்தினம் மாநகர சபையில் இடம்பெற்ற கூட்டம், மாநகரசபையுடன் தொடர்புபட்டதாகும். எனவே மாநகரசபை உறுப்பினர் என்ற வகையில் இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்.



எனினும், நான் கூட்டத்தில் பங்கு பற்றியதை உறுதிப்படுத்தும் வருகைப் பதிவேட்டில் எனது கையொப்பத்தை இட்டேனே தவிர மாநகரசபை உறுப்பினர் நிஷாந்தனுக்கு எதிராக எவ்வித ஆவணத்திலும் கையொப்பமிடவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அசையாநிலைப் பாதுகாப்பு இராணுவத் தளபதிக்கும்

(கிளிநொச்சி)

இதுவரை காலமும் ஜனாதிபதி மாளிகைக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த அசையா நிலைப் பாதுகாவலர் (Straic Guard) பாதுகாப்பு இராணுவத் தளபதிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அசையா நிலைப் பாதுகாப்பு (Straic Guard) என்பது ஜனாதிபதிக்கு கௌரவமளிக்கும் வகையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பொன்றாகும். அதன் பிரகாரம் ஜனாதிபதி மாளிகையின் பிர



தான வாயிலின் இருபுறமும் அசையா நிலையில் விறைப்பாக நின்று கொண்டிருக்கும் பாதுகாவலர்கள் இருபத்து நான்கு மணிநேரமும் பாதுகாப்பு வழங்கிக் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நீதித்துறையில் மக்களின் நம்பிக்கை மேலும் வலுப்படுத்த முயற்சிக்கவேண்டும்

### சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் விரிவுபடுத்தப்படுவதால் இலங்கை நீதிமன்றங்களின் சுதந்திரம் வேகமாகப் பறிபோகிறது என்று சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கத்தின் மனித உரிமைகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதிக்கு ஒட்டுமொத்த அதிகாரத்தையும் வழங்கிய 18 ஆம் திருத்தச் சட்டமூலம் பற்றியும், தலைமை நீதிபதியின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளுக்குள் மட்டுப்படுத்துகின்ற மற்றும் நீதிமன்றம் சார் சேவைகள் ஆணையத்திற்கான செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்குக் கொடுக்கின்ற முன்மொழியப்பட்டுள்ள 19 ஆம் திருத்தச் சட்டமூலம் பற்றியும் லண்டனில் இயங்கும் இச்சங்கம் தமது கவலையை வெளிவிட்டுள்ளது.

இலங்கையானது ஒரு நிலைத்துநிற்கும் சமாதானத்தைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர்கள் மேலும் ஒரு தொகுதியினர் விடுதலை



(வவுனியா)

வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து கடந்த இரு ஆண்டு காலம் புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றவர்களில் முன்னாள் புலி உறுப்பினர்களில் ஒரு தொகையினர் நேற்று வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் குடும்பத்தாருடன் இணைக்கப்பட்டார்கள்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, இளைஞர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பதவிக்கு மீண்டும் பான் கீ மூன்

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், தனது இரண்டாவது தவணை பதவிக் காலத்திற்கு போட்டியிடுவது குறித்து இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்து பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

66 வயதான தென்கொரியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான பான் கீ மூன் தவிர்ந்த வேறு யாரும் இப் பதவிக்கு போட்டியிடுவதாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## கடன் அட்டை மோசடி; திருமலையில் பணமூடைகள் மீட்பு

(கொழும்பு)

திருகோணமலை நகரத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 78 கோடி பெறுமதியான பண மூட்டைகள் இலங்கை சிறப்புப் புலனாய்வுக் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில் கொழும்பு நான்காம் மாடி விசாரணைப் பிரிவிற்கு பொறுப்பான புலனாய்வுத் துறையினரிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு புலனாய்வுத்துறை அணி ஒன்று குறித்த வீட்டை சுற்றி வளைத்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிநிதிக்கு தடை விதித்தது அரசு

(கொழும்பு)

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் போன, தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணை நடத்தி வரும் ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி பிராங்க லா றூ இலங்கை வருவதற்கான அனுமதியை இரண்டாவது தடவையாகவும் அரசாங்கம் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதி பிராங்கலா றூவை இலங்கைக்கு அழைத்து காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத், படுகொலை (16 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் மந்த போஷாக்கு தடுத்து நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கிராம மட்டங்களில் வறுமை காரணமாக போஷாக்கின்மை பொதுமக்களிடையே அதிகரித்துக் காணப்படுவதாகவும் இந்த நிலையைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது எனவும் உடனடியாகக் கிராமப்புற மக்களின் போஷாக்கு நிலைமைகளில் பிரதேச செயலாளர்கள் கணிப்பீடு செய்து அவர்களுக்கு வேண்டிய அவசர, அவசியமான தேவைகளை ஆராய்ந்து இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற எல்லோருக்கும் போஷாக்கு என்னும் சுகாதார அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதற்கு விசேட திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள மற்றும் யாழ்.மாவட்ட பிரதேச அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## முதியோர் இல்ல அபிவிருத்தி கிளிநொச்சியில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி யோகா சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்ல அபிவிருத்தி சார்ந்த பொதுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும். கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் மேற்படி முக்கிய கூட்டம் இடம்பெறும். பழைய - புதிய அங்கத்தவர்கள், நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மகாதேவா ஆச்சிரம நிலையத் தலைவர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.


## சிறு விளம்பரம்

**அலுவலகப் பணியாளர் படிவம் விற்பனையாகிறது**

வட. மாகாணப் பொதுச்சேவை அலுவலகப் பணியாளர் IIIஆம் வகுப்பு பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 10.06.2011 ஆகும்.

குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் விண்ணபியுங்கள். சி.என்.எச்.சாள்ஸ்.

(படிவ விநியோகஸ்தர்) C/533


## நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொது மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ஜெயகாந் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இம்மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய வேலைகள் துரித கதியில் இடம்பெற்றுவருகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இம் மின்சார விநியோகத்தினால் மருத்துவமனையின் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோக நடவடிக்கைகள் மேற்கொளளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (110)

## நவீன சிறுவர் நூலகம் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுசன நூல் நிலையத்தின் சிறுவர் பகுதி சிங்கப்பூர் அரசின் நிதி உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டு அடுத்த மாதம் 28 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா இத் தகவலை தெரிவித்தார். நேற்றைய தினம் யாழ்.பொதுநூலகத்தில் நவீன வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நூலகத்தின் சிறுவர் பகுதிக்கு அண்மையாகச் சிங்கப்பூர் அரசின் நவீன பூங்கா அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இங்கு வருகின்ற சிறுவர்கள் அறிவைப் பெற்றுக்கொள்வதுடன் மகிழ்ச்சிகரமான விளையாட்டுக்களிலும் ஈடுபடலாம் என்று தெரிவித்தார்.(கா)

## பனை நாற்று நடுகை புதிய செயற்திட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் மூவாயிரம் பனம் நாற்றுக்களை நடுகை செய்யவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்யிறன.

மேற்படி பனம் நாற்றுக்களை நடுகை செய்வதற்கான பணியினை ஊர்காவற்றுறை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடுகை செய்வதற்கான பனம் நாற்றுக்களை பனை அபிவிருத்திச் சபை ஊடாக பெற்றுத்தருவதற்கான முயற்சிகளைப் பாரம்பரி கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவாணந்தா மேற்கொண்டுள்ளார். (27)

## மின்னொளியில் கரப்பந்தாட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியும மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளது.

இப்போட்டி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவற்குழி நவசக்தி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்ச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (11)

## யாழ்.முஸ்லிம்களின் தேவைகள் சம்மேளனக் கூட்டத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் ஏ.எம்.ஜமால் தலைமையில் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் விசேட அதிதியாக யாழ்.பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மக்களுடனான சந்திப்பை ஏற்படுத்தினார்.

மக்களின் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன. உலக வங்கி வீட்டுத்திட்டத்தில் ஏற்கனவே உதவி பெற்றவர்கள் இங்கு உதவிபெறமாட்டார்கள். ஏனைய உதவிகளும் ஏற்கனவே பெறாதவர்கள் பெற்றுக்கொள்வதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்குரிய உதவிகளை வழங்குவதற்கு எவ்விதத்திலும் தாம் தடையாகவிருக்கவில்லை. மக்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்துகொண்டால் எமது நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமையும் என்று அவர் அங்கு தெரிவித்தார். (19)



யாழ்.பொதுநூலக நவீன சிற்றுண்டிச்சாலை மாநகர முதல்வரால் நேற்று திறந்துவைக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். .


TASTE OF JAFFNA RESTAURANT

எமது Restaurant இன் இன்னொரு புதிய அறிமுகம்

Executive Take away lunch Packets

- மரக்கறிச் சாப்பாடு - 120/=
- கோழிச் சாப்பாடு - 150/=
- மீன் சாப்பாடு - 150/=
- இறால் சப்பாடு - 170/=
- கணவாய்ச் சாப்பாடு - 160/=
- நண்டுச் சாப்பாடு - 160/=
- கோழிப் புரியாணி - 240/=
- சிக்கன் பிறைட் ரைஸ் - 200/=

உங்கள் இல்லங்களில் நடைபெறும் எல்லாவிதமான விழாக்களுக்கும் நீங்கள் தெரிவு செய்யும் உணவு வகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப Buffet முறையில் உங்கள் இல்லங்களுக்குக் கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : முகாமையாளர், ரேஸ்ட் ஒப் ஜப்னா, றெஸ்ரோறெண்ட்

101, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 1322 021 320 7190


## யுத்தத்தில் சிதைந்த பொதுச் சந்தை மீண்டும் புனரமைப்பது எப்போது

### ஊர்காவற்றுறை மக்கள் ஏக்கம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொதுச் சந்தை கடந்த யுத்தகாலத்தில் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியபோதும் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது.

நவீன சந்தைக்கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டபோது அதன் ஒரு பகுதி பூர்த்தியடையாத நிலையிலும் சந்தையின் உட்புறப் பகுதிக் கடைகள் பூரணப் படுத்தப்படாமல் காணப்படுகின்றது. சந்தைப்பகுதியின் குறிப்பிட்ட சில வீதியோரக் கடைகளே பாவனையில் உள்ளதுடன் உட்புறப் பகுதிக் கடைகள் பல திருத்தப்படாமல் அழிவடைந்த நிலையில் உடைந்து காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மேற்படிப் பொதுச் சந்தையினை உரிய நிர்வாகிகள் மிக விரைவாகத் திருத்தியமைத்து மக்களின் இயல்பான நடவடிக்கைக்கு வழிசமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கடந்த யுத்தகால சூழ்நிலை முடிவடைந்தமையினை அடுத்து மீண்டும் ஊர்காவற்றுறைப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறிய பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருவதால் இப் பொதுச் சந்தையின புனரமைப்புப் பணி மிக முக்கியமானது. (27)

மனிதன் விழ விழ எழும்பக் கற்றுக்கொள்கிறான். இறுதியில் விழாமலே இருக்கக் கற்றுக்கொள்கிறான். அவனே அனுபவசாலி.

- யாரோ.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பகைமறப்பும் சாத்தியமே!

"பழைய வெறுப்புணர்வுகளைக் கொண்டு எதிர்கால நம்பிக்கைகளை நாம் பாழடித்துவிடக் கூடாது. மரம் பழைய இலைகளை வீசியெறிந்து விடுவது போல நாமும் நம் மனங்களிலிருந்து செத்துப்போன சிந்தனைகளைத் தூக்கியெறிந்துவிட வேண்டும்." என்று 1962 ல் ஆற்றிய உரையொன்றில் கூறியிருக்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

செத்துப்போன சிந்தனைகளை மட்டுமல்லாமல், நம்மையும் சாகவைத்துக் கொண்டிருக்கும் பழைய சிந்தனைகளையும் தூக்கியெறிந்து விடும் துணிச்சலும், விவேகமும் நமக்கு வரவேண்டும்.

நம்மைப் பற்றிய பெருமித உணர்வுகளின் மறுதலையாக உருவாகும் நினைப்பாகிய, மற்றவர்களை எல்லாம் இழிவாக எண்ணும் போக்கும், வெறுப்பும், விலக்குதலும் நமக்குள் நீண்ட காலமாக வேரூன்றி வளர்ந்திருப்பவை. இன்றும் சில அரசியல் சுயலாபங்களுக்காக பிரிவினை ஆவேச நீரூற்றி மேலும் மேலும் வளர்த்து விடப்படுபவை.

நமக்குள் அழுத்தமாக ஊன்றப்பட்டிருக்கும் இந்த எண்ணங்கள், மற்றவரோடு ஒருபோதும் இணங்க முடியாதவர்களாக, பன்மைத்துவ வாழ்வுக்கென்று எப்பனும் இறங்கி வர முடியாதவர்களாக நம்மை ஆக்கி வைத்திருக்கிறது.

இன்னொரு இனத்தையே காட்டுமிராண்டிகளாகவும், பேசுவதற்கே லாயக்கற்ற கொடூர எதிரிகளாகவும் வர்ணித்துப் பொருமி வெடிக்கின்ற வைகோ, சீமான் வகையறாக்கள் மற்றும் நம் நாடு கடந்த அரசுலகப் பெருமக்களையும் கேட்டுக் கேட்டு நாமும் வெறுப்பு நிறைந்த பாத்திரங்களாகப் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறோம்.

இந்தத் தீவினுள் பல சமூகங்களுடன் ஒரு சமூகமாகவே நாம் வாழவேண்டும். இங்குள்ள ஏனைய இனங்களான சிங்களவர்களுடனும், முஸ்லிம்களுடனும் அவர்களது இருப்பைச் சகித்தே நாம் வாழ வேண்டும் என்ற யதார்த்தங்களை மறந்து நாம் யாரையோ, எதையோ நம்பிப் போலிக்குப் பொங்கிக் கொண்டிருக்கிறோம்.

எவருடனும் பேச்சு சாத்தியமில்லை என்று பின்புற மண்ணைத் தட்டிக் கொண்டு வந்துவிட ஆயிரம் காரணங்கள் இருக்கும். ஆனால், அந்தக் காரணங்களைத் தோற்கடிக்கும் அற நம்பிக்கையே நமது அரசியலை முன்னகர்த்தும்.

கூட வசிக்கும் மற்றொரு இனத்தின் முழு மனிதர்களையுமே நமக்கு நம்ப முடியாமல் போனால், உலகில் வேறு எங்கிருந்தோ மக்களோ, அரசோ வந்து நமக்கு உதவுவார்கள் என்ற நப்பாசையைக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

நமக்குள் மலைபோல வெறுப்பைக் குவித்து வைத்துக்கொண்டு, இந்தியாவோ, ஐ.நா.வோ, அமெரிக்காவோ வந்து எதிர்த்தர[illegible]பின் கையை முறுக்கித் தீர்வை வைக்கச் சொன்னால்தான் நமக்கு விடிவும், வாழ்வும் என்று காத்திருக்கும் அரசியல் வங்குரோத்தை ஏன் இன்னும் நாம் புரிந்துகொள்ளவில்லை?

எல்லா நாடுகளின், ஏன் உலக மக்களினது ஆதரவும் நமக்கு வேண்டியதுதான். ஆனால், அதற்கு முன் நாம் இந்த நாட்டிலுள்ள ஏனைய இன மக்களோடு மனந்திறந்து உரையாடியிருக்கிறோமா, நம் தன் முனைப்பை விட்டு அவர்களை நெருங்கியிருக்கிறோமா என்று கேட்டுப் பார்த்துக் கொள்வது முக்கியம்.

அகிம்சை வழியிலும், ஜனநாயக வழிமுறைகளிலும் போராடிப் பார்த்த பிறகுதான் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினோம் என்று எங்களையே நாம் ஏமாற்றிக் கொள்வது போன்ற ஒரு பதிலை இதற்கும் சொல்லக்கூடாது.

அகிம்சை, ஜனநாயகப் போராட்டங்களின் அரிச்சுவடியையே நாம் தொட்டுப் பார்த்திராதவர்கள் என்ற உண்மையை, இன்றைய உலக அறிவோடு ஒப்பிட்டு ஒத்துக்கொள்ள நாம் கூச வேண்டாம்.

நமக்குள் இறுகிக் கெட்டியாகிப் போயிருக்கும் எண்ணங்களை, இன்றைய உலக ஒழுங்கின் புதிய வெளிச்சத்தில் நாம் உற்றுப் பார்த்து மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அதற்குப் பகை வெறுப்பிலிருந்தும், மாற்ற முடியா விரோத மனப்பாங்கிலிருந்தும் நாம் முதலில் வெளிவர வேண்டும்.

*– ஆசிரியர்.*

# மேலும் மூவாயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

ஆசிரியர் சேவைக்கு மேலும் 3 ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், விஞ்ஞானம், ஆங்கிலம் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கென போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த 500 பேருக்கும், கல்வித்துறையில் தற்போது சேவையாற்றிவரும் 500 பேருக்கும் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

-இதேவேளை நுண்கலைப் பட்டதாரிகள் 3ஆயிரத்து 174 பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், இதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நுண்கலைப்பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதற்காக அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தவிர்ந்த ஏனைய பட்டதாரிகளுக்கும் இந் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர்சேவையில் இதைவிட 1000 அதிபர்களையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா நகரசபை மைதானத்தில் வருடாந்த தேசிய இளைஞர் தினம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த தேசிய இளைஞர் தின வைபவம் வவுனியா நகரசபை மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

தென்னிலங்கை உள்ளிட்ட பல இடங்களிலிருந்தும் சுமார் 1,500 இளைஞர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். அத்துடன், புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ளவர்களும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

இளைஞர் தின வைபவத்தை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனக்குழுவும், கயிறு இழுத்தல் போட்டியில் புனர்வாழ்வு இளைஞர் குழுவும் வெற்றியீட்டியது.

அமைச்சர்களான டலஸ் அழகப் பெருமாள், சந்திரசிறி கஜதீர பிரதி அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, தேசிய இளைஞர்சேவைகள் மன்றப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித்கியூ பெரேரா,புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க உள்ளிட்ட பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இவ்வாண்டை இளைஞர் ஆண்டாக பிரகடனம் செய்தது. நகரசபை மைதானத்தில் மாலை நடைபெற்ற வைபவத்தில் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன், வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்ற தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற இளைஞர் விழாவில் சமாதான கேக் வெட்டிப் பரிமாறப்பட்டது. வடபகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் இணைந்து இந்த கேக்கினை வெட்டினார்கள்.

# கட்டுநாயக்க மோதல் சம்பவம் சொத்து இழப்பீடு வழங்க வேண்டும்

### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்தர வர்த்தக வலயத்தில் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்ட மற்றும் சொத்துக்கள் சேதமடைந்தமைக்கு அரசாங்கம் இழப்பீடு செலுத்த வேண்டும் என்ற யோசனையை நாடாளுமன்றத்தில் கொண்டு வர தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த யோசனை நாளைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தை ஊழியர்களின் விருப்பமின்றி அரசாங்கம் செயற்படுத்த முனைந்ததால், இந்த விபரீதம் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ரொஷான் சனக்க என்ற இளைஞர் உயிரிழந்து இருப்பதால், அரசாங்கம் அவரின் குடும்பத்திற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய இழப்பீட்டை வழங்க வேண்டும்.

அத்துடன் காயமடைந்தவர்கள், தாக்குதலில் சேதமடைந்த தொழிற்சாலைகளுக்கும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கல்லாறில் மீள் குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதி

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கல்லாறு பிரதேசத்தில் கால் ஏக்கர் திட்டத்தில் மீள்குடியேறியுள்ள 100இற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்தில் காணிகள் அற்ற 100 வரையான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்படி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மீள் குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதி மக்கள் குடிநீர் முதல் ஏனைய அடிப்படைத்தேவைகளை பெற்றுக்கொள்வதில் நாளாந்தம் பல்வேறு கிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கு இரு நாட்களுக்கு ஒருதடவையே குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் ஒரு நபருக்கு 2 நாட்களுக்கு ஒரு தடவை 10 லீற்றரை குடிதண்ணீர் வழங்கப்பட்டுவருவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் தண்ணீர் போதுமானதாக இல்லை அத்துடன் தாம் குடிநீரைப் பெறுவதாயின் பிரமந்தனாறு பகுதிக்கு சென்றே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட மருத்துவ வசதிகளும் இங்கு இல்லை எனவும் மருந்துத் தேவைக்களுக்கு தர்மபுரம் மற்றும் கிளிநொச்சி நகருக்கு சென்றே சிகிச்சை பெறுவதாகவும் அவசர சிகிச்சைகளை பெறதாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை போக்குவரத்து வசதிகளும் சீராக இடம்பெறுவதில்லை இதனால் நடைபயணத்தை மேற்கொண்டே தமது தேவைகளை பூர்த்தி செய்வதாகவும் அக்கிராம மக்கள் தமது மனவருத்தத்தை தெரிவிக்கின்றனர். எனவே இப்பிரதேச மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள். தங்களுக்கான அடிப் படைவசதிகளை ஏற்படுத்தித்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# தனியார்துறை ஊழியர் பணத்தை அபகரிக்கவே ஓய்வூதியத்திட்டத்தை முன்வைத்துள்ளது அரசு

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களின் பணத்தை அபகரிக்கும் நோக்கில் ஓய்வூதியத் திட்டம் முன்வைக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்தார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

தனியார்துறை ஊழியர்கள் ஆயுள் முழுவதிலும் உழைத்த பணத்தை அரசாங்கம் கபடமான முறையில் அபகரிக்க முயற்சிக்கின்றது. தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை எனினும், அது அரசாங்கத்தின் பணத்திலிருந்து வழங்கப்பட வேண்டும்

தனியார்துறை ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடும் நபர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தும் மக்களின் உரிமைகளை முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுவருகிறது இவ்வாறான தாக்குதல்களின் மூலம் நாட்டின் முதலீட்டுத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படக் கூடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்லாறு தமிழ் வித்தியாலயத்தின் அடிப்படைத்தேவைகள் நிவர்த்தியாகும்

## சந்திரகுமார் எம்.பி. உறுதியளிப்பு



(முரசுமோட்டை)

அடிப்படைசவதிகள் இன்றி மிகவும் பின்தங்கிய நிலையில் இயங்கி வரும் கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடி அடிப்படைவசதிகளை ஏற்படுத்தித்தருவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

குறித்த வித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர், பாடசாலையைப் பார்வையிட்டதுடன், குறைநிறைகளையும் கேட்டறிந்தனர்.

இதில் கரைச்சி வடக்கு கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் நந்தகுமார் மற்றும் கிராம அலுவலர் பி. சந்திரன் ஆகியோர் இப்பாடசாலையின் குறைப்பாடுகள், தேவைகள் குறித்து விளக்கமளித்தனர்.

இதனை கேட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இப்பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தாம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், சமாசத் தலைவர், கிராம சேவையாளர், சமாசபொது முகாமையாளர் இ. கணேசபிள்ளை ஆகியோரும் பாடசாலைக்குச் சென்றிருந்தனர்.(110)

# அரச ஊழியர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கடந்த கால போர் நடவடிக்கைகள் மற்றும் இயற்கை அழிவுகளினால் தமது சொந்த வீடுகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் ஆகியவற்றை இழந்தவர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதன்படி அரச ஊழியர்களுக்கான காசோலைகள் வழங்கும் வைபவம் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நட்ட ஈட்டுக் காசோலை பெறும் அரச ஊழியர்கள் தமது ஆள் அடையாள அட்டை, அறிவித்தல் தந்தி என்பனவற்றையும் கொண்டு வருமாறு றேப்பியா திணைக்களத் தலைவர் அறிவித்துள்ளார். (70)

# கட்டுரைப் போட்டி

(வடமராட்சி)

புலோலி தெற்கு ஊரறிஞர் கந்தமுருகேசனாரின் 46ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பாடசாலை மாணவர்களும் ஏனையவர்களும் கலந்து கொள்ளலாம். அத்துடன் கந்தமுருகேசனாரின் வாழ்க்கை வரலாற்றினை கொண்டதாக கட்டுரை எழுதப்படல்வேண்டும். இப்பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

போட்டிக்கரிய ஆக்கங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கந்தமுருகேசனார் விழாக்குழு, புலோலி தெற்கு புலோலி, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

# வீரர்கள் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

89 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் முதல்இடத்தைப்பெற்ற தென்மராட்சி பிரதேச வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் ப.நோ. கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் இ. ராஜராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.. (11)

# சுயதொழில் கடன்

(கிளிநொச்சி)

இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளையினால் புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுதலையாகிவந்த முன்னாள் புலிஉறுப்பினர்களுக்கு தொழில் முயற்சிக்கான நீண்டகால குறைந்த வீத வட்டியிலான சுய தொழில் கடன் வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கடன் வசதிகள் மூலம் தாம் சுயதொழிலைச் செய்வதற்கு பெரும் உதவியாக இருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இப்பிரதேசத்திலுள்ள பலருக்கு இக்கடன் வசதிகள் தொடர்பாக தெரியாது இருப்பதாகவும், இது தொடர்பான அறிவுறுத்தல்களை தாம் மேற்கொண்டுவருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (77)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

(பளை)

பளைப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அரசர் கேணி, இத்தாவில் பகுதிகளின் தேவைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் அண்மையில் அரசர்கேணிப்பகுதியில் இடம் பெற்றது.

பச்சிலைப்பள்ளி மேற்கு அபிவிருத்திச்சங்கத்தலைவர் மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் அலுவலக இணைப்புச் செயலாளர் அ.அன்ரன் அன்பழகன், பச்சிலைப்பள்ளி மேற்கு அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சண்முகநாதன், அரசர்கேணி கிராம அலுவலர் கண்ணப்பமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய இணைப்புச் செயலாளர் அன்ரன் அன்பழகன், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் மக்களும் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கும் இவ் வேளையில், மீண்டும் சுயநல அரசியல்வாதிகளால் அவதிக்குள்ளாக்கப்பட மக்களாகிய நீங்கள் அனுமதிக்கக்கூடாதெனத் தெரிவித்தார். (29)

# தாளையடி புனித அந்தோனியார் வருடாந்தத் திருவிழா ஆரம்பம்

(தாளையடி)

தாளையடி புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தினமும் மாலை 5.15 மணிக்கு திருச்செபமாலையும், திருப்பலியும் மறையுரைகளும் இடம் பெறுவதுடன், எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறுவர்களுக்கு முதன் நன்மை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பலியும் தேவநற்கருணைப்பவனியும், மறுநாட்காலை திருநாட் திருப்பலியும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் இடம் பெறவுள்ளன.

வருடாந்த திருவிழா ஒழுங்குகளை தாளையடி பங்குத்தந்தை அருட்திரு ஜேம்ஸ்நாதன் தலைமையில் ஆலய நிர்வாகத்தினர், வலயத்தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (70)

# உதவி அரசஅதிபர் பணிமனைக்கு புதிய இரண்டு மாடிக்கட்டடம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு 35மில்லியன் ரூபா செலவில் புதிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இப்பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாமல் வாடகை வீடுகளிலும் பொதுக் கட்டங்களிலும் இயங்கி வந்துள்ள நிலையில், இங்கு போதிய இடவசதிகள் இன்றி பணியாளர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் சேவையாற்றி வந்ததாகவும், பொதுமக்களும் சிரமத்தின் மத்தியிலேயே சேவை பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில், இம்மக்களுக்கு சீரான சேவையை வழங்கும் நோக்குடன் இப்புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (80)

# வீதிப்புனரமைப்பு வேலைகளுக்கு 670 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கட்டுவன்)

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட 14 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 134 கிலோ மீற்றர் தூரமான கிராம வீதிகள் 670 மில்லியன்ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், கீரிமலையில் உள்ள கமநல சேவை நிலையம் 10.50 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவிருகின்றன.

அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட இளவாலை வடக்கு ஜே/221, இளவாலை வடமேற்கு ஜே/222, வித்தகபுரம் ஜே/223, கொல்லங்கலட்டி ஜே/225, நகுலேஸ்வரம் ஜே/226, தெல்லிப்பளை ஜே/228,தந்தை செல்வாபுரம் ஜே/230, மாவிட்டபுரம் ஜே/231, மாவிட்டபுரம் தெற்கு ஜே/232, பளை வீமன்காமம் வடக்கு ஜே/236, பளை வீமன்காமம் தெற்கு ஜே/237, வறுத்தலை விளான் ஜே/241, குரும்பசிட்டி கிழக்கு ஜே/243, வசாவிளான் மேற்கு ஜே/245 ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீதிகளே புனர்மைக்கப்படவுள்ளன. (22)

# நேரகாலத்துடன் பூட்டப்படும் பாமசிகளால் வடமராட்சிப் பகுதி மக்கள் பல்வேறு சிரமம்

(கரணவாய்)

வடமராட்சி பகுதியிலுள்ள மருந்து விற்பனை நிலையங்கள் நேரகாலத்துடன் பூட்டப்படுவதால் அப்பகுதி மக்கள் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியிலுள்ள இந்த மருந்து விற்பனை நிலையங்கள் தினமும் மாலை 6 மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் 12 மணியுடனும் பூட்டப்பட்டுவிடுவதால் அவசரமாக மருந்து தேவைப்பட்டால் வேறு இடங்களுக்குச் சென்றே பெற்றுக் கொள்ளவேண்டி நிலை காணப்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் யாருக்காவது நோய் ஏற்பட்டால் அதற்குரிய மருந்துகளைப் பெற முடியாதுள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (18)



**கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட செம்புநடன மாணவிகளின் நாட்டிய நிகழ்வைக் காணலாம். (77)**

# கமநல சேவையில் வெற்றிடம் நூறு விண்ணப்பித்தவர்களோ 11 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

கமநல சேவையில் உள்ள 100 வெற்றிடங்களுக்கு 11, 000 பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த சம்பவம் ஒன்று குடாநாட்டில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இது குடாநாட்டில் பல்லாயிரம் படித்த இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பற்று இருப்பதனை வெளிப்படுத்துவதாக யாழ் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தின் ஏற்பாட்டில் 'யாழ் மற்றும் வடக்கில் புதிராக விளங்கும் தொழிலாளர் சந்தை' எனும் தலைப்பிலான பகிரங்க பொது மன்றம் ஒன்று யாழ். பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இங்கு கருத்துரை வழங்கும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது குடாநாட்டில் உள்ள 26,000 இளம் விதவைகள், புனர்வாழ்வு பெற்றுள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் பட்டப்பின் பட்டங்களைப் பெற்றும் வேலை பெறாது இருக்கின்ற இந்தப் பகுதியினருக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பது பெரும் சவாலாக உள்ளது.

இது குடாநாட்டில் பாரிய கைத்தொழில் முதலீடுகளை ஏற்படுத்துவதற்கு உட்கட்டுமான வசதிகள் போதுமானதாக இல்லை.

விஷேடமாக தற்போது மின் பிறப்பாக்கிகளிலிருந்து வழங்கப்படும் மின் வலுவானது பால் கைத்தொழிற்சாலைக்களுக்குப் போதுமானதாக இல்லை.

இதனால் முதலீட்டாளர்கள் குடாநாட்டில் பாரிய கைத்தொழில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயங்குகின்றனர் என அரச அதிபர் இங்கு குறிப்பிட்டார். (74)



காரை அபிவிருத்திச்சபை நூலக அடிக்கல் நாட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி, திரை நீக்கம் செய்வதைக் காணலாம். (50)

# பிணையில் செல்ல முடியாதவர்கள் வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றம்

(கிளிநொச்சி)

தனியார் பஸ்சில் பயணம் செய்த யுவதியின் பணத்தை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர்களைப் பிணையில் எடுக்க எவரும் முன்வராததால் அவர்கள் வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள சம்பவம் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடாபாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி குற்றச்சாட்டில் வவுனியா- பூந்தோட்டத்தைச் சேர்ந்த ரவி ஆசாகுமாரி (வயது-21), கந்தசாமி தவமணி (வயது-45), சுப்பிரமணியம் நிரோசனி (வயது 20) ஆகிய மூவரையும் கிளிநொச்சி குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிவானிடம் குறித்த மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இவர்களுடைய 14 நாட்கள் முடிவடைந்த நிலையில், நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டபோது நீதிவான் மூவரையும் எச்சரிக்கை செய்து பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

எனினும் இவர்களைப் பிணையில் எடுப்பதற்கு உறவினர்கள் எவரும் வராததால், நீதிமன்றத்தின உத்தரவில் வவுனியா சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(77)

## முச்சக்கர வண்டி சங்கத்தினால் குறைந்த கட்டணத்தில் சேவை

நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கத்தினூடாக எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து சேவை வழங்க தீர்மானித்துள்ளதாக நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கத்தின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட இ.புஸ்பரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் ஈ.பி.டி.பி கட்சியின் நெல்லியடி அமைப்பாளர் செந்தில்நாதன் தலைமையில் நெல்லியடி முச்சக்கரவண்டி சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புதிய தலைவராக இ.புஸ்பகரன் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் உரையாற்றும் போது - எமது சங்கத்தினூடாக கரவெட்டிப் பிரதேச எல்லைக்குட்பட்ட மக்களில் பிரசவத்திற்குச் செல்லும் பெண்களை இலவசமாக மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்வதுடன், எதிர்வரும் காலத்தில் பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவையை வழங்கவும் தீர்மானித்துளோம் எனத் தெரிவித்தார். (18)

# அலங்கார உற்சவம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் தினமும் விசேட பூசை வழிபாடுகள் என்பன இடம்பெற்று வருவதாகவும், கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியார்கள் கலந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (110)

# மருதங்கேணிப் பிரதேசத்தில் 350 பேருக்கு வீட்டுத்திட்டம்

(வடமராட்சி)

அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த 350 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் செம் பியன்பற்று வடக்கு, செம்பியன் பற்று தெற்கு, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை, வத்திராயன் ஆகிய பிரதேசங்களில் வாழும் மிகவும் வறிய மக்களுக்கு அவர்களின் வறுமை நிலையை கருத்திற் கொண்டு இவ்வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒருபயனாளிக்கு 4 இலட்சம் ரூபா வீதம் இவ் வீட்டுத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (80)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(06.06.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

வைகாசி 23 ஆம் நாள்.

இராகுகாலம் 7.22-8.52, சுபநேரம் 11.52 -1.22,

நட்சத்திரம் பூசம் பி.ப. 2.58 வரை

திதி: பஞ்சமி மு.இ 11.28 வரை

சேக்கிழார், நமியந்தியடிகள் குருபூசை தினம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** பண வரவு, குடும்ப அமைதி, நண்பர்கள் உதவி, தொழிலில் மேன்மை, காரியம் வெற்றி.

**ரிஷபம்:-** பணம் வரவு, குடும்பத்தில் நிம்மதி, நண்பர் சொல்லை, வீண் அலைச்சல், உடம்பு ஆரோக்கியம்.

**மிதுனம் :-** குடும்பத்தில் குதூகலம், காரிய சித்தி, மன நிம்மதி, திடீர் பயணம், பண வரவு.

**கடகம்:-** பணக் கஷ்டம், குடும்பத்தில் கலகம், உடல் நலக் குறைவு, நண்பரால் தொல்லை, விபத்து வரலாம்.

**சிம்மம்:-** குடும்பத்தில் நிம்மதி, பண வரவு, வீண் அலைச்சல், முதியோர் உதவி, திருத்தலப் பயணம்.

**கன்னி :-** பண வரவு, மன நிம்மதி, நண்பர்களால் உதவி, உடம்பு ஆரோக்கியம், திடீர் நன்மை.

**துலாம் :-** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, மன நிம்மதி, உடல்நலக் குறைவு, நண்பர் தொல்லை.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை, பண வரவு, உடல் ஆரோக்கியம், விபத்து வரலாம்.

**தனுசு:-** பண நஷ்டம், உடல்நலக் குறைவு, குடும்பத்தில் கலகம், திடீர் பயணம்.

**மகரம்:-** குடும்பத்தில் நிம்மதி, பண வரவு, முதியோர் ஆசி, உடல் ஆரோக்கியம், திடீர் நன்மை.

**கும்பம் :-** குடும்பத்தில் குழப்பம், பண நஷ்டம், உடல் நலமின்மை, திருடர் பயம், விபத்து வரக்கூடும்.

**மீனம்:-** பண வரவு, குடும்பத்தில் நிம்மதி, நண்பர் உதவி, மூத்தோர் ஆசி, திடீர் நன்மை.

# பூநரி கோட்ட மட்டத்திலான ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

பூநகரி கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் முதன் மூன்று இடங்களைப் பெற்றோரின் தொடர்ச்சி வருமாறு-

**உரத்து வாசித்தல் - பிரிவு -3**

ஆர்.அபிஷாயினி- பூநகரி ம.வி, எம்.கிஷாயினி-ஜெயபுரம் ம.வி, எஸ்.டிலக்சிகா-முழங்காவில் ம.வி.

பிரிவு-4

பி.கஜதீபா-முழங்காவில் ம.வி, என்.ஹர்மதா-முழங்காவில் ம.வி, ரி.கௌசல்யா-ஜெயபுரம் ம.வி.

பிரிவு-5

எஸ்.திவ்யா-முழங்காவில் ம.வி, எஸ்.தரணிதரன்-முழங்காவில் ம.வி, ரி.பவிதரன்-ஜெயபுரம் ம.வி.

**கதை கூறல் - பிரிவு-6**

ஐ.பதீபா-முழங்காவில் ம.வி, எஸ்.சுஜாரிதர்-முழங்காவில் ம.வி.

பிரிவு-7

எஸ்.மதுவதனி-முழங்காவில் ம.வி, ஆர். சுகன்யா-ஜெயபுரம் ம.வி, எம்.லக்சியா-முழங்காவில் ம.வி.

பிரிவு-8

வி.நிரோஜன்-முழங்காவில் ம.வி, ஆர்.கம்சனா- முழங்காவில் ம.வி.

பிரிவு-9

ஆர்.ஜென்துசன்-ஜெயபுரம் ம.வி, ஜே.தட்சியா-ஜெயபுரம் ம.வி, கே.கஜன்-முழங்காவில் ம.வி.

**தனி நடிப்பு - பிரிவு -10**

கே.குருசாந்-முழங்காவில் ம.வி, கே. துாரிகா-முழங்காவில் ம.வி.

பிரிவு -11

ஜே. விதுஷா-முழங்காவில் ம.வி, பி.அஜந்தா-முழங்காவில் ம.வி.

பிரிவு -12

ரி.சரண்ராஜ்-முழங்காவில் ம.வி.

**குழுப்பாடல் - ஆரம்பப் பிரிவு (1,2)**

முழங்காவில் ம.வி, இரணைதீவு ஆர்.சி.ரி.எம்.எஸ், ஜெயபுரம் ம.வி.

**ஆரம்பப் பிரிவு (2,3,4,5)**

முழங்காவில் ம.வி, இரணைதீவு ஆர்.சி.ரி.எம்.எஸ், ஜெயபுரம் ம.வி,

**குழு (தனி- 6-9)**

ஜெயபுரம் ம.வி, முழங்காவில் ம.வி. (10-13) ஜெயபுரம் ம.வி

**நாடகம்**

பூநகரி நல்லூர் ம.வி

**பாத்திரமேற்று நடித்தல் (6-8)** முழங்காவில் ம.வி. (9-11) முழங்காவில் ம.வி.

யாழ்ப்பாணத்தில் றோட்டுகள், பாதைகள், ஒழுங்கைகள் என்னென்னத்துக்கெல்லாம் பயன்படுகுதெண்டு பாருங்கோவன்!

கும்பம் நடத்த, கிரிக்கட், புட்போல் அடிக்க, சர்க்கஸ் விளையாட்டுக்காட்ட மட்டுமெண்டே நினைக்கிறியள் அதுதானில்லை.

வீடுகளில் வெட்டிக்கழிக்கிற வாழை இலைகுழை, தடிதண்டுகள்போட வீடு கட்டிறேண்டா கல்லு, மண்ணுப்பறிக்க எண்டில்லாமல் மண் கல் விக்கிறதுக்கும் றோட்டில் பறிச்சுப் போட்டு வைத்துத்தான் வியாபாரம் செய்யிற!

இல்லாட்டி நாலு பேருக்குத் தெரியுமே! றோட்டு, ஒழுங்கை, பாதையையெல்லாம் போக்கு வரவுச் செய்யப் பாவிச்சதும், பயன்படுத்தியதும் அந்தக்காலம் மலையேறிப்போச்சு!

இதெல்லாம் என்னத்தால வருகுது. எங்க எங்கட குணம், கோத்திரத்தாலதான் வருகுது. எனக்கு வீதியால மற்றவனுக்கு இடைஞ்சல் இல்லாமல் போய் வாறது பிடிக்கும்.

இன்னொராளுக்கு எவன் எப்பிடிப் போய் வந்தா என்ன என்ர வீடு வாசல் துப்புரவா இருந்தாப் போதும், சேருற குப்பையளைக் கொண்டுபோய் றோட்டில கொட்டுறதுதான் பிடிக்கும்.

இன்னும் சிலருக்கு வீட்டுக்கை இருந்து கிணத்துத் தவளை மாதிரி புழுங்கிக்கொண்டு இருக்கமுடியாது. பாதையில வந்து நிண்டு போறவாற நாலுபேரை மறிச்சு வைச்சுக்கதைக்கிறது தான் பிடிக்கும். உலகம் பலவிதம். அதில் நானொருவிதமெண்டு ஒவ்வொருத்தரும் ஒருகோலம் கொள்ளுறதாலதான் இந்த வில்லங்கம்?

சட்டம், ஒழுங்கு, சமயமெல்லாம் கிடந்திட்டுப் போகட்டுமன். நாங்களேன் அதைத் தீண்டிப்பார்க்க வேணும்? இதுதான் இப்பத்தை ஆக்களின்ரை பிளான் பாருங்கோ.

இதுகளை எந்தக் காலத்திலும் திருத்த ஏலாது. மோசேஸ் பத்துக் கட்டளைகளைக் கொண்டந்து படிப்பிச்சது எந்தக்காலம். அந்தக்காலம் திருப்பி வந்திட்டுது போலதான் கிடக்கு.

சோக்கிறட்டீஸ், திருவள்ளுவர், பாரதி போன்றவர்கள் தோன்றாதிருந்தா இநத மனிசர் இப்பவும் கற்கால மனிதராய்த் தான் வாழுங்கள். இண்டைக் கென்ன மாறியே போட்டுதுகள் ஊம்....ஹூம்...



பரமர் சங்கமம்

# ஆண்களுக்கான "எல்லே" போட்டியில் யாழ்.மாவட்டம் சம்பியனாகியது





(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாவட்ட அணிகளுக்கிடையே வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில் யாழ். மாவட்ட அணி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யாழ்.மாவட்ட அணி 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

இதனைத் தொடர்ந்து விளையாடிய மன்னார் மாவட்ட அணி 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் விளையாடிய யாழ்.மாவட்ட அணி அனைவரும் ஆட்டம் இழந்து மீண்டும் 14 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

ஆட்ட நிறைவில் யாழ்.மாவட்ட அணி 23இற்கு 6 ஓட்டங்கள் என்ற நிலையில் மன்னார் மாவட்ட அணியை வெற்றிபெற்று வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

## ஒக்ரோபரில் நடைபெறவுள்ள முக்கோண கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக முக்கோண வெற்றிக்கிண்ணத்திற்கான அணிகள் பங்குபற்றும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தவுள்ள இந்தப் போட்டியில் கடந்தாண்டில் ஜோர்ஜ் வெப்சர் வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று கழகங்களும் மோதவுள்ளன.

கடந்தாண்டு இந்தப் போட்டித் தொடரில் சிறந்த முதல் மூன்று கழங்கங்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம், ஜொலிஸ்ரர் விளையாட்டுக் கழகம், யாழ். சென்ரலி விளையாட்டுக்கழகம் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

## நாவற்குழி நவசக்தியை தோற்கடித்தது மோகனதாஸ்

(கைதடி)

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணியளவில் மட்டுவில் மோகனதாஸ் "பி" அணிக்கும், நாவற்குழி நவசக்தி "பி" அணிக்கும் இடையில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 2:0 என்ற நிலையில் மட்டுவில் மோகனதாஸ் அணி வெற்றி பெற்றது. இதேவேளை, இன்று இரவு ஏழு மணியளவில் மட்டுவில் மோகனதாஸ் "ஏ" அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி "ஏ"அணி மோதவுள்ளது.

## டில்ஷான் சாதனை



இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் ஆட்டநேர முடிவில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 372 ஓட்டங்கங்கள் எடுத்தது. அணித் தலைவர் திலகரட்ண டில்ஷான் 193 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்திற்கு எதிரான டெஸ்டில் புதிய சாதனை படைத்தார்.

இதற்கு முன்னர் 1984 இல் சிதத் வெத்துமுனி 190 ஓட்டங்கள் எடுத்ததே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தப் போட்டியில் சங்கக்கார - 26, பரணவிதான - 65, மகேல ஜெயவர்த்தன - 40 (ஆட்டமிழக்காமல்), சமரவீர - 1 (ஆட்டமிழக்காமல்) பெற்றிருந்தனர்.

இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 486 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும்.

## வலிகாமம் வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் வருமாறு-

**பெண்கள் பிரிவு**

11 வயது : 75 மீற்றர் ஓட்டம்

என்.ரேணுசியா-சுழிபுரம் நாகேஸ்வரி, என்.விதுர்ஷனா-மானிப்பாய் விவேகானந்தா, என்.சபிதா-சுழிபுரம் எஸ்.வி.

100 மீற்றர் ஓட்டம்

என்.ரேணுசியா- சுழிபுரம் நாகேஸ்வரி, என்.சபிதா-சுழிபுரம் எஸ்.வி, ஆர்.சாளினி - மானிப்பாய் விவேகானந்தா.

உயரம் பாய்தல்

எஸ்.அபிசனா-அருணோதயாக் கல்லூரி, எஸ் சரணியா-ஏழாலை ஸ்ரீமுருகன், கே.வின்துயா-நடேஸ்வரா கனிஷ்ட வித்தி, ஏ.ஜீவிதா-சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தி.

நீளம் பாய்தல்

என்.விதுர்சனா-மானிப்பாய் விவேகானந்தா, ரி.ஜான்சி-விக்டோரியாக் கல்லூரி, எஸ்.அபிசனா-அருணோதயக் கல்லூரி.

13 வயது : 100 மீற்றர் ஓட்டம்

ஆர்.ஜெனற்றாநோஜி-இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம், பி.சானு-மகாஜனக் கல்லூரி, வி,நிவேகா-அராலி சரஸ்வதி.

200 மீற்றர் ஓட்டம்

ஆர்.ஜெனற்றாநோஜி-இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம், வி.சதிவிகா-அருணோதயாக் கல்லூரி, பி.சானு-மகாஜனக் கல்லூரி.

உயரம் பாய்தல்

எம்.மேரி குலோசியா-அருணோதயாக் கல்லூரி, எஸ்.சோபிகா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, பி.அமண்டாநிஷ்றின்-யாழ்ப்பாணக் கல்லூரி, ஏ,தனுசியா-குளமங்கால் ஆர்.சி.

நீளம் பாய்தல்

வி.சதிவிகா-அருணோதயாக் கல்லூாி, ஏ.தனுசியா-குளமங்கால் ஆர்.சி, யோகிதா-இராமநாதன் கல்லூரி.

15 வயது : 100 மீற்றர் ஓட்டம்

ஜெ.றீசல் விசாளினி-இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம், எஸ்.சிந்துஜா-மகாஜனக் கல்லூரி, எம்.வித்யா-பண்டத்தரிப்பு ஜெசிந்தா.

200 மீற்றர் ஓட்டம்

ஜெ.றீசல் விசாளினி-இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம், சிந்துஜா-மகாஜனக் கல்லூரி, என்.நித்தியப்பிரியா-மாதகல் நுணசை.

400 மீற்றர் ஓட்டம்

எஸ்.சிந்துஜா-மகாஜனக் கல்லூரி, ரி.வக்சலா-நவாலி மகா வித்தி, எம்.வித்யா-பண்டத்தரிப்பு ஜெசிந்தா.

100 மீற்றர் கேடில்ஸ்

எஸ்.டிலானி-விக்டோரியா கல்லூரி, ஜெ.அனிதா-மகாஜனக் கல்லூரி.

400 மீற்றர் கேடில்ஸ்

ஜெ.ரேகா-இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடம், கௌசிகா-மல்லாகம் மகா வித்தி, எம்.ஜென்சிகா-அருணோதயாக் கல்லூரி.

உயரம் பாய்தல்

வி.பவித்ரா-ஏழாலை ஸ்ரீமுருகன், எம்.ஜென்சிகா-அருணோதயாக் கல்லூரி, கே.கிரிஜா-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

நீளம் பாய்தல்

ஜெ.அனிதா-மகாஜனக் கல்லூரி, வி.பவித்ரா-ஏழாலை ஸ்ரீமுருகன், எஸ்.டிலானி-விக்டோரியாக் கல்லூரி.

குண்டுபோடுதல்

ஜெ.கலைவாணி-மகாஜனக் கல்லூரி, எம்.அபிராமி-மல்லாகம் எம்.வி, எஸ்.சோபிகா- பொன்னாலை வரதராஜப் பெருமாள்.

தட்டெறிதல்

ஜெ.கலைவாணி-மகாஜனக் கல்லூரி, ஏ.திவ்யடோறின்-அருணோதயாக் கல்லூரி, எம்.கீர்த்திகா-மாலனி சைவ மகா வித்தி.

ஈட்டி எறிதல்

ஜெ.அனிதா-மகாஜனக் கல்லூரி, ஜெ.கலைவாணி-மகாஜனக் கல்லூரி, ஜெ.அகிலா-மானிப்பாய் மொமோறியல் கல்லூரி.

17 வயது : 1500 மீற்றர் ஓட்டம்

ஏ.மரியநாயகி-மாதகல் சென்.ஜோசப், ஏ.வை.இன்பவேணி-விக்டோரியாக் கல்லூரி, கே.நிகேதினி-இராமநாதன் கல்லூரி.

100 மீற்றர் கேடில்ஸ்

டி.நிதுஜா-விக்டோரியாக் கல்லூரி, கே.ரோசாந்தினி-ஏழாலை ஸ்ரீமுருகன்.

உயரம் பாய்தல்

ரி.சங்கீதா-சண்டிலிப்பாய் இந்து.

நீளம் பாய்தல்

டி.நிதுஜா-விக்டோரியாக் கல்லூரி, ரி.சங்கீதா-சண்டிலிப்பாய் இந்து, என். கம்சிகா-இளவாலை மெய்கண்டான்.

தடைதாண்டல்

டி.நிதுஜா-விக்டோரியாக் கல்லூரி, கே.ரோசாந்தினி-ஏழாலை ஸ்ரீமுருகன், எஸ்.நிகனியா-மகாஜனக் கல்லூரி.

கரப்பந்தாட்டம்

எஸ்.குவைசிகா-அருணோதயாக் கல்லூரி, கே.டிலக்ஷனா-அருணோதயாக் கல்லூரி.

குண்டெறிதல்

எஸ்.கோபிகா-விக்டோரியாக் கல்லூரி, எஸ்.கிருஷ்சாந்தி-ஏழாலை ஸ்ரீமுருகன், கே.கீர்த்தனா-இராமநாதன் கல்லூரி.

தட்டெறிதல்

எஸ்.சுகன்யா-விக்டோரியாக் கல்லூரி, கே.தீபாஜினி-புன்னாலைக்கட்டுவன் ஏ.எம்.ரி, எஸ்.கோபிகா-விக்டோரியாக் கல்லூரி.

ஈட்டி எறிதல்

ரி.சங்கீதா-சண்டிலிப்பாய் இந்து, எஸ்.சுகன்யா-விக்டோரியாக் கல்லூரி.

17 வயது : 100 மீற்றர் ஓட்டம்

எம்.கமலினி-வட்டு.மத்திய கல்லூரி, எவ்.தர்சிகா-இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம், சி.மேரி ஜோசப்கினி-மாதகல் சென்.ஜோசப். தொடரும்....)

# பிரெஞ்ச் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் லீ நா கிண்ணத்தை சுவீகரித்தார்



பிரெஞ்ச் ஓப்பன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதன் முறையாக சீனாவின் லீ நா சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தினார்.

சீன வீராங்கனை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வது இதுவே முதன் முறை. பரீசில் பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியாவோனே, சீனாவின் லீ நாவை சந்தித்தார்.

தொடக்கத்தில் இருந்தே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய லீ நா முதல் செட்டை 6-4 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் ஷியாவோனே பதிலடி தருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் டை பிரேக்கர் வரை நீடித்த இந்த செட்டையும், லீ நா தன்வசப் படுத்தினார். இறுதியில் 6-4, 7-6 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்ற சீனாவின் லீ நா முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியை வெற்றிகொள்வது என்பது கடினம்

## என்கிறார் ஹர்பஜன்

(டினிராட்)



மேற்கிந்தியத் தீவுகள் அணி எளிதாக வெல்லக் கூடிய அணியாக இருக்கமாட்டாதென இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.


மேற்கிந்தியத்தீவிற்குச் சென்றுள்ள இந்திய அணி, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் ஒருநாள் போட்டியில் பங்கேற்கிறது. இதுகுறித்து அணியின் துணைக் கப்டன் ஹர்பஜன் கூறியதாவது-

மேற்கிந்தியத் தீவு அணியில் அதிரடி வீரர் கெய்ல, சந்தர்போல் போன்ற அனுபவ வீரர்கள் இல்லாத போதும், மற்ற வீரர்கள் நல்ல பார்மில் உள்ளனர. இவர்களை வெல்வது எளிதான காரியமல்ல.

சொந்த மண்ணில் பல வெற்றிகளை பெற்று வந்த எங்களுக்கு, இது நெருக்கடியை கொடுககும் என நினைக்கிறேன். முதல் ஒரு நாள் போட்டிக்காகக் . கடினமான பயிற்சி மேற்கொண்டு வருகிறோம்.

தோனி, சச்சின், சேவாக், கம்பீர, யுவராஜ் போன்ற அனுபவ வீரர்கள் இல்லாத போது, இளம் வீரர்கள் தங்களுக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி அணியில் நிரந்தர இடம்பிடிக்க முயற்சிக்க வேண்டும். இவர்கள் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் வலுவான அணியாக வலம் வருவோம் எனத் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க பயிற்சியாளராக ஹேர்ஸ்டன்



இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற ஹேர்ஸ்டன், தென்னாபிரிக்க அணிக்குப் பயிற்சியாளர் ஆகவுள்ளார்.

இந்திய அணியின் வெற்றிகரமான பயிறசியாளராக இருந்தவர் தென்னாபிரிக்காவின் ஹேர்ஸ்டன். இவரது தலைமையில் இந்திய அணி, சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்துக்கு முன்னேறியது.

அண்மையில் முடிந்த உலகக்கோப்பை தொடருடன், இப்பதவியில் இருந்து விடை பெற்றார் ஹேர்ஸ்டன். குடும்பத்துடன் நேரத்தைச் செலவிட இருப்பதால், மீண்டும் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியை ஏற்க மறுத்தார். தற்போது, ஹேர்ஸ்டன் தென்னாபிரிக்க அணிக்கு பயிற்சியாளர் ஆகவுள்ளார். இதுகுறித்த முறைப்படியான அறிவிப்பு இன்று வெளியாகலாம். துணைப் பயிற்சியாளராக முன்னாள் தென்னாபிரிக்க வீரர் அலன் டொனால்ட் தெரிவு செய்யப்படலாம் என்றும் தெரிகிறது.

முன்னாள் வீரர் வெசல்ஸ் கூறுகையில், ஹேர்ஸ்டன் இந்திய அணிக்காக பயிற்சியாளர் பதவியில், நம்பமுடியாத வகையில் செயற்பட்டு அசத்தினார். இவர் பயிற்சியாளராவது தென்னாபிரிக்க கிரிக்கெட்டுக்கு நல்ல செய்தி என்றார்.

# இறுதிச் சுற்றுவரை முன்னேறியது மனநிறைவு என்கிறார் சானியா



பிரெஞ்ச் ஓப்பன் இறுதிச்சுற்றில் தோல்வியடைந்தது மறக்க முடியாத வலிதான். ஆனாலும் சிறப்பாக விளையாடியது மனநிறைவைத் தந்துள்ளது என்று இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா தெரிவித்துள்ளார்.

பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் சானியா-ரஷியாவின் வெஸ்னினா ஜோடி 4-6, 3-6 என்ற நேர் செட்களில் செக். குடியரசின் ஆண்ட்ரியா-லூசி ஜோடியிடம் தோல்வி கண்டது.

இதுகுறித்து சானியா மேலும் கூறியதாவது- எந்த நிலையிலும் தோல்வி, தோல்விதான். ஆரம்பத்தில் அது வேதனையானதுதான். இருப்பினும் எனது கடந்தகால ரெனனிஸ் வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் இப்போது இறுதிச்சுற்று வரை முன்னேறியது மனநிறைவு அளிக்கிறது. இறுதி ஆட்டத்தில் எங்களின் எதிர்ஜோடியான ஆண்ட்ரியா-லூசி ஜோடி எங்களைவிடச் சிறப்பாக ஆடினர் என்றார். தன்னுடன் ஜோடி சேர்ந்து விளையாடிய ரஷியாவின் எலினா வெஸ்னினா குறித்துப் பேசிய சானியா, நான் இதுவரை விளையாடியவர்களில் வெஸ்னினாவே எனக்கு மிகச்சிறந்த ஜோடி என்றார்.

சானியா-வெஸ்னினா ஜோடி சிறப்பாக ஆடிவருவது குறித்து கேட்டபோது, நாங்கள் இருவரும் இளம் வயதில் இருந்தே நல்ல தோழிகள். வெஸ்னினா மிகச்சிறந்த பின் கை (பக் ஹேண்ட்) ஆட்டக்காரர். முன் கை(போர் ஹேண்ட்) ஆட்டக்காரர்களின் சேர்வீஸ்களை முறியடிக்க பொருத்தமானவர். இதுவே எனக்கு பலம் சேர்த்தது என்றார். மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பெரிய அளவில் சோபிக் காதது குறித்து சானியாவிடம் கேட்டபோது ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் முன்னணி வீரர்களை எதிர்கொள்வதும் தோல்விக்கு ஒரு காரணம். ஒற்றையர் பிரிவில் தோற்றதை துரதிருர்ஷ்டமாக பார்க்கவில்லை. என்னை விடச் சிறந்த வீராங்கனைகளிடமே தோற் றுள்ளேன்.

அவுஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஜஸ்டின் ஹெனினிடமும், பிரெஞ்ச் ஓப்பனில் அக்னீஸ்கார ரத்வன்ஸ்காவிடமும்தான் தோற்றேன். இருப்பினும் ஒற்றையர் பிரிவில் கடினமான பயிற்சி மேற்கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன். இன்னும் சில மாதங்களில் தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் வருவேன் என்றார்

# அப்ரிடியின் அணித் தலைமை பறிப்பு; பி.சி.பி. காரணம் தெரிவிக்க வேண்டும்

(கராச்சி)



அப்ரிடியை கப்டன் பதவியிலிருந்து நீக்கியதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முறையான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது- அப்ரிடி கப்டன் பதவியில் சிறப்பாகச் செயற்பட்டார். அணியைத் திறம்பட வழி நடத்தினார். அவரது தலைமையிலான பாகிஸ்தான் அணி உலகக் கோப்பையில் அரையிறுதி வரை முன்னேறியதோடு, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரையும் வென்றது. எனவே சிறப்பாக வழிநடத்திச் சென்ற அப்ரிடியை கப்டன் பதவியிலிருந்து நீக்கியதற்கு சரியான காரணங்களை பி.சி.பி. தெரிவிக்க வேண்டும். இது போன்ற பெரிய முடிவுகளை அவர்கள் அதிரடியாக எடுத்திருக்கக்கூடாது. அவரை நீக்கிய பிறகாவது அவர்கள் அதற்கான காரணத்தைத் தெரிவித்திருக்க வேண்டும்.

அப்ரிடி கிரிக்கெட் சபையை விமர்ச்சித்துள்ளது குறித்து கருத்துத் தெரிவித்த வசிம் அக்ரம், இதில் அப்ரிடியின் கருத்தை ஆதரிக்க முடியாது. கப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டவுடன் அவர் ஊடகங்கள் முன்னிலையில் கிரிக்கெட் சபையை விமர்சித்திருக்கக்கூடாது. இது தொடர்பாக முதலில் கிரிக்கெட் சபையிடம்தான் பேசியிருக்க வேண்டும். அப்ரிடியின் இந்தச் செயல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புகழுக்கு பங்கம் விளைவித்துள்ளது என்றார்.

அப்ரிடி பாகிஸ்தான் அணிக்காக மீண்டும் விளையாட வேண்டும் என்று கூறிய அவர், அவருக்கு இப்போது 31 வயதுதான் ஆகிறது. அதனால் அவர் இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகள் விளையாட முடியும். அது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு நல்லதாக அமையும் என்றார்.

அப்ரிடி பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் இடையிலான மோதல் குறித்துப் பேசிய அக்ரம், ஏற்கெனவே சூதாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் சீரழிந்து காணப்படும் பாகிஸ்தான் கிரிக்கெட்டை இந்தப் பிரச்சினை மேலும் அசிங்கப்படுத்தியுள்ளது. எங்கு சென்றாலும் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் என்ன தவறு நடந்து கொண்டிருக்கிறது என்று மக்கள் கேட்கிறார்கள். அவர்களின் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

பாகிஸ்தானில் மட்டும்தான் பயிற்சியாளர் அதிக அதிகாரங்களை பெற்றிருக்கிறார். மற்ற நாடுகளில் கப்டனின் கருத்துக்கே பயிற்சியாளர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர். உலகக் கோப்பையில் இந்திய அணியை வழிநடத்திய கேரி கிர்ஸ்டனை இன்னும் நிறையப்பேருக்குத் தெரியாது. எனவே வக்கார் யூனிஸ் அணித் தேர்வில் அதிகாரம் செலுத்தாமல் வீரர்களைச் சிறப்பாக விளையாட வைக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தவரை கப்டனே அணியை வடிவமைக்கிறார். அவரே முடிவெடுக்க வேண்டும். அப்ரிடி விவகாரத்தில் பிரச்சினை தொடருமானால் அது பாகிஸ்தான் கிரிக்கெட்டின் புகழை அழிப்பதாக அமையும். எனவே இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றார் அவர்.

# ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரை பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரைப் பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகவும், இதனால் எதிர்காலத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை அடக்க இராணுவத்தினரைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கட்டுநாயக்க பிரதேசத்தில் காணப்படும் கலவரமான நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் வரை இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுப்படுத்தப்பவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க தாக்குதல் சம்பவத்தை அடுத்து, ஊழியர்கள் பொலிஸார் மீது ஆத்திரம் கொண்டுள்ளதால், பிரச்சினைகள் ஏற்படும் என்ற காரணத்தினால், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் பாதுகாப்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



2010 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி, மாணவி ஒருவருக்கு புலமைப் பரிசிலை வழங்குவதனையும், அருகில் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, பந்துலகுணவர்த்தன, ஜோன்ஸன் பெர்னாண்டோ நிற்பதனையும் காணலாம்.

## — புலிகளுக்கு ஆதரவான அமைப்பின் கோரிக்கையை —

# ஐ.நா.மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நிறைவேற்றி வருவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை என்ற புலிகளுக்கு ஆதரவான அமைப்பின் கோரிக்கையின்படியே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசு மற்றும் இலங்கை இராணுவத்திற்கு எதிராக போர்க் குற்றங்களைச் சுமத்த முயற்சிப்பதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது**

குறித்த அமைப்பு மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, நிபுணர்கள் குழுவின் உறுப்பினர் யஸ்மின் சூகா, ஐ.நா. விசேட விசாரணையாளர் கிறிஸ்தோவ் ஹெயின்ஸ் ஆகியோரை பாராட்டி மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளதன் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தமது கோரிக்கையை நிறைவேற்றியமை குறித்து, இந்த மூவரையும் பாராட்டுவதாக அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜர் குறித்த தகவல்களை 'ஐரோப்பாவில் இயங்கும் புலிகளின் இணையத்தளங்கள் வெளியிட்டிருந்தன.

இலங்கை இராணுவம் போர் குற்றங்



களில் ஈடுபட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஆணையாளர் மேற்கொள்ளும் முயற்சிக்கு தமிழ் மக்கள் தமது நன்றியைத் தெரிவித்து கொள்வதாக அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளதாக திவயின மேலும் தெரிவித்துள்ளது.

## உலகம் முழுவதும் 350பாடசாலைகளை புலிகள் நடாத்தி வருகின்றனராம்

(கொழும்பு)

புலிகள் உலகம் முழுவதிலும் சுமார் 350 பாடசாலைகளை நடாத்தி வருவதாக 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்ச் சோலை மற்றும் தமிழ் உலகம் என்னும் பெயர்களில் இந்தப் பாடசாலைகள் இயங்கி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் பெரும் எண்ணிக்கையிலானவை ஐரோப்பிய நாடுகளில் காணப்படுதாகவும், இப் பாடசாலைகளின் மூலம் புலிகள் நிதி திரட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தப் பாடசாலைகளில் தனி இராச்சியம் தொடர்பில் மாணவர்களுக்கு பாடம் புகட்டப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ள ஊடகம், இதன் காரணமாக இளம் தலைமுறையினரை மூளைச் சலவை செய்யும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த சீன அரசாங்கம் உதவியளிக்கும்



(பீஜிங்)

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த சீனா தயாராக உள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ணவிடம், ஜீனான் மாநில ஆளுநர் உறுதியளித்தார்.

சீனா மற்றும் தெற்காசியப் பிராந்திய நாடுகளில் ஆறாவது வர்த்தக மாநாட்டிலும், தெற்காசியப் பிராந்திய நாடுகளினது நான்காவது வர்த்தகக் கண்காட்சியிலும் பங்கேற்பதற்காகவுமே பிரதமர் சீனா சென்றுள்ளார்.

சீனாவின் குங்விங் விமான நிலையத்தில் ஜுனான் மாநில ஆளுனர் மற்றும் சீனாவுக்கான இலங்கை பதில் தூதுவரும் பிரதமரை வரவேற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் அந்த மாநிலத்தின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்த சீனா தயாராக உள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.


இலங்கையில் சீனா தற்போது பாரிய அளவிளான செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

எதிர்காலத்திலும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த பிரதமர் டீ. எம் ஜயரட்ண இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே கட்டியெழுப்பப்படும் புதிய உறவுகள் இலங்கையுடனான நீண்டகாலப் பயணத்தின் ஆரம்பம் என குறிப்பிட்டார்.

# சிரேஷ்ட அமைச்சர்களுக்கான பணிகள் வழங்கப்படவில்லை

## அமைச்சர் நாவின்ன கவலை



(கொழும்பு)

இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு உரிய பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் சிரேஷ்ட அமைச்சர்களுக் கான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களுக்கு எவ்வித பணிகளும் தரப்படவில்லை என்று சிரேஷட அமைச்சர்களில் ஒருவரான எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

தாம் பதவியேற்றது முதல் இதுவரை எந்த ஒரு அமைச்சரவைப் பத்திரத்தையும் சமர்ப்பிக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் அதிகளவு சம்பளத்தைப் பெறுகின்றனர். சிரேஷ்ட அமைச்சர்களுக்கு குறைவான சம்பளமே வழங்கப்படுவதாகவும் நாவின்ன சுட்டிக்காட்டினார்.

# இராஜதந்திர வழிமுறைகளை ஜேர்மனியத் தூதுவர் மீறிவிட்டார்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு —



(கொழும்பு)

தனக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் கடிதமெழுதிய ஜேர்மனி நாட்டுத் தூதுவரை பாதுகாப்பு அமைச்சுக்கு அவசரமாக அழைத்து கண்டித்துள்ளார் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

கட்டுநாயக்கவில் சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீது பொலிஸ் நடத்திய தாக்குதலைக் கண்டித்து கடும்தொனியில்- எச்சரிக்கை விடுக்கும் இரண்டு பக்கக் கடிதம் ஒன்றை ஜேர்மனித் தூதுவர் ஜீன்ஸ் புளொட்னர், பாதுகாப்பு செயலருக்கு அனுப்பியிருந்தார்.

இதையடுத்து அவரைப் பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்த கோத்தபாய ராஜபக்ஷ, தனக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியதன் மூலம் இராஜதந்திர வழிமுறையை மீறியுள்ளதாக கண்டித்துள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றிக் கவலை கொண்டால் அதுபற்றி வெளிவிவகார அமைச்சுக்கே கடிதம் எழுதியிருக்க வேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சுக்கு எழுதியிருக்கக் கூடாது என்றும் அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன் ஜேர்மனித் தூதுவர் இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொமாண்டோகளும் தொடர்புபட்டிருந்ததாக கூறியுள்ள குற்றச்சாட்டையும் நிராகரித்துள்ளார்.

சிறப்பு அதிரடிப்படையினர் இதில் சம்பந்தப்படவில்லை என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பொலிஸ் மா அதிபர் ஒருவர் உள்ளிட்ட 25 காவலர்கள் இந்தச் சம்பவத்தில் எப்படிக் காயமடைந்தனர் என்பதையும் ஜேர்மனித் தூதுவர் புறக்கணித்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஒரு மில்லியன் நிலக்கண்ணிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது

(கொழும்பு)

ஒரு மில்லியன் நிலக்கண்ணி வெடிகள் இன்னமும் அகற்றப்பட வேண்டியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. 400 சதுர கிலோ மீற்றர் பரப்பரளவில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

1.6 மில்லியன் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும் இதில் 3 இலடசத்து 66 ஆயிரத்து 870 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். 2003ஆம் ஆண்டு முதல் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினரும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கீழே காணப்படும் வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

32. △ + □ - ○ = 5

□ = 8, ○ = 12 எனின், △ இன் பெறுமதி யாது?..............................

33. □ - ○ - △ = 10

□ = 50, △ = 15 எனின், ○ இன் பெறுமதி யாது?..............................

34. என்னிடமுள்ள பணம் ரூபா 15 ஆகும். தம்பியிடம் உள்ள பணம் ரூபா 7 ஆகும். என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தொகைகள் சமனாவதற்கு நான் தம்பியிடம் எவ்வளவைக் கொடுக்க வேண்டும்?

1. ரூபா 8 2. ரூபா 4 3. ரூபா 11

**பின்வரும் அட்டவணையை அவதானித்து வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

பழக் கடைக்குச் சென்ற நான்கு பேர் வாங்கிய பழங்களின் தொகைகள் குறியீட்டில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டுக்குரிய பெறுமதிகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

↑=5 ↓=10 →=15 ←=20

| பெயர் | பழங்களும் அவற்றின் எண்ணிக்கையும் | | |
|---|---|---|---|
| | மாம்பழம் | அப்பிள் | அன்னாசி |
| கமலம் | → | ↑ | → |
| ஈஸ்வரி | ← | → | → |
| வசந்தி | ↑ | ↓ | ↑ |
| ஜனனி | ← | ↑ | ↓ |
| பானுஷா | → | ↑ | ↑ |

35. ஈஸ்வரி வாங்கிய அப்பிள் எத்தனை?

1. 5 2. 10 3. 15 4. 20

36. மொத்தமாக 20 பழங்கள் வாங்கியவர் யார்?

1. கமலம் 2. ஈஸ்வரி 3. வசந்தி 4. பானுஷா

37. இவர்களுள் கூடுதலாக வாங்கியவர் யார்?

1. ஜனனி 2. வசந்தி 3. ஈஸ்வரி 4. கமலம்

38. ஒரே அளவான பழங்கள் வாங்கியவர்கள் யாவர்?

1. கமலமும், வசந்தியும் 2. ஜனனியும், ஈஸ்வரியும்
3. பானுஷாவும், கமலமும் 4. கமலமும், ஜனனியும்

39. ஐவரும் மொத்தமாக வாங்கிய பழங்களின் எண்ணிக்கை

1. 150 2. 160 3. 165 4. 170

40. நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.

1. 10015 2. 100015 3. 1500000





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்

# கல்விமுரசு

வெளியீடு 17



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**முதலில் உள்ள இரண்டு சொற்களுக்கு இடையிலான தொடர்பை விளக்கி அடுத்துவரும் சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. விளக்கு - வெளிச்சம் கல்வி -


1. பணம் 2. அறிவு 3. புத்தகம் 4. தாவரம்

02. வீடு - அத்திவாரம் மரம் -

1. வேர் 2. கிளை 3. பூ 4. தாவரம்

**கீழே காணப்படும் உருவை அவதானித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

நீலநிற மலர்கள் →



← வாசமுள்ள மலர்கள்

03. இங்கு காட்டப்பட்டுள்ள நீல மலர்கள் எத்தனை?

..............................

04. இங்கு காட்டப்பட்டுள்ள வாச மலர்கள் எத்தனை?

..............................

05. என்னிடம் நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறமுடைய இனிப்புக்கள் இருந்தன. தம்பியிடம் கறுப்பு, மஞ்சள், பச்சை ஆகிய இனிப்புக்கள் இருந்தன. தங்கையிடம் வெள்ளை, மஞ்சள், ஊதா ஆகிய நிற இனிப்புக்ள் இருந்தன எனின், எந்த நிறமுடைய இனிப்பு மூவரிடமும் இருந்தது?

..............................

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

06. பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது.

1. சாரதி - பயணிகள் - பிச்சைக்காரர்கள் 2. நடத்துநர் - சாரதி - இசை
3. ஆசனங்கள் - சாரதி - நடத்துநர்

07. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.

1. கப்பல், பயணிகள், பிச்சைக்காரர் 2. மீன், மீனவர்கள், கரை
3. நீர், அலை, மீன்

08. பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A -நித்திரைவிட்டு எழுதல் B -.............................. C-..............................
D-.............................. E - வீட்டிலிருந்து புறப்படுதல்

1. A - உடை அணிதல், B - முகம் கழுவுதல், C - உணவு உண்ணல்
2. A - உணவு உண்ணல், B- முகம் கழுவுதல், C - உடை அணிதல்
3. A - முகம் கழுவுதல், B - உடை அணிதல், C - உணவு உண்ணல்

**கீழே ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் சொற்களின் எழுத்துக் கோலத்தை விளக்கி வெற்றுக் கூண்டுக்குப் பொருத்தமான சொல்லைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.**

09. வெண்பா → பாம்பு → [ ] → யன்னல்

1. புதிர் 2. புதிய 3. புடவை 4. யானை

10. மரல → ரமல → [ ] → மரல

1. மரல 2. ரமல 3. லமர 4. லரம

**சரியான தொடர்பில் அமைந்த விடையின் கீழ் கீறிடுக.**

11. 25, 50, 60, 75 ஆண்டுகளின் பூர்த்தியின்போது கொண்டாடப்படும் விழாக்கள் முறையே

   1. பொன்விழா, வெள்ளிவிழா, பவளவிழா, அமுதவிழா
   2. வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழா
   3. வெள்ளிவிழா, மணிவிழா, பொன்விழா, வைரவிழா

12. ஐம்புலன்களைக் குறிப்பது.

   1. மெய், வாய், கண், மூக்கு, செவி
   2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
   3. ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இவை கருத்தற்றவை என விளக்குக.**

13. எனது அண்ணா பிறந்தபோது அம்மா எனக்குப் புதிய சட்டை ஒன்று வாங்கித் தந்தாக அப்பா என்னிடம் கூறினார்.

..............................................................................................................

14. இன்ஷிறா முக்கோணத்தின் நான்கு முகங்களுக்கும் நிறம் தீட்டியதாகக் கூறினாள்.

..............................................................................................................

**சரியான விடையை இனங்கண்டு அதன் கீழ் கோடிடுக.**

மஸ்றுபாவை விடக் குமைறா 10 வருடங்கள் இளையவள். நிம்றானை விட அப்துல்லா 5 வருடங்கள் மூத்தவன். குமைறாவும் அப்துல்லாவும் ஒரே வயதினர். குறைமாவின் வயது 15 ஆகும்.

15. இவர்களில் மிகவும் இளையவர்

   1. மஸ்றுபா   2. குமைறா   3. நிம்றான்   4. அப்துல்லா

16. மஸ்றுபா, நிம்றான் என்போருக்கிடையே உள்ள வயது வித்தியாசம்

   1. 15 வருடங்கள்   2. 12 வருடங்கள்   3. 5 வருடங்கள் 4. 20 வருடங்கள்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**


17. நான் எனது தங்கையிடம் 8 நாணயக் குற்றிகள் கொடுத்துவிட்டு ஒரு காசுத்தாளை வாங்கிக் கொண்டேன் எனின், நான் கொடுத்த நாணயக் குற்றிகள்.

   1. 1/= நாணயம் 2, 2/= நாணயம் 3, 5/= நாணயம் 3
   2. 5/= நாணயம் 3, 2/= நாணயம் 2, 1/= நாணயம் 2
   3. 2/= நாணயம் 4, 5/= நாணயம் 2, 1/= நாணயம் 2

18. இரு வாகனங்கள் ஒரே நேரத்தில் A என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் சென்றன. ஒரு வாகனம் மணிக்கு 40 கிலோமீற்றர் மாறா வேகத்தில் சென்றது. மற்றைய வாகனம் மணிக்கு 30 கிலோமீற்றர் மாறா வேகத்தில் சென்றது. 30 நிமிடத்தின் பின் இரு வாகனத்திற்கும் இடையிலான தூரம்.

   1. 70 கிலோமீற்றர்   2. 10 கிலோமீற்றர்   3. 35 கிலோமீற்றர்

19. கீழே தரப்பட்டுள்ள உருவின் மடிப்புக்களை மடித்து ஆக்கக்கூடிய கட்டை எது?



1   2   3   4

**தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு 20, 21 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

அப்பாவின் வயதைவிட அம்மாவின் வயது 8 வருடங்கள் குறைவாகும். எனது வயதைவிட அப்பாவின் வயது 30 வருடங்கள் அதிகமாகும். தம்பி என்னைவிட நான்கு வருடங்கள் இளையவன். தம்பியின் வயது 8 வருடங்கள் எனின்,

20. அம்மாவின் வயது?

   1. 8 வருடங்கள்   2. 12 வருடங்கள்   3. 34 வருடங்கள்   4. 42 வருடங்கள்





21. எனக்கும் அம்மாவிற்கும் இடையில் எத்தனை வருட இடைவெளி காணப்படுகின்றது?

   1. 8 வருடங்கள்   2. 30 வருடங்கள்   3. 26 வருடங்கள்   4. 22 வருடங்கள்

22. இரு எண்களின் கூட்டுத்தொகை 46. அவ்விரு எண்களுக்கும் இடையில் வித்தியாசம் 16 எனின், அவ்விரு எண்களும் எவை?

   1. 20, 26   2. 15, 31   3. 16, 30   4. 16, 46

**ராமு ஓர் ஆண்பிள்ளை, ராமுவின் அக்காவிற்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரிகள் இருவரும் உள்ளன.**

23. ராமுவிற்கு இருக்கும் ஆண் சகோதரர்கள் எத்தனை பேர்?

   1. 3   2. 2   3. 1

24. ராமுவிற்கு இருக்கும் பெண் சகோதரிகள் எத்தனை பேர்?

   1. 3   2. 2   3. 1

25. 20 மீற்றர் நீளமும், 10 மீற்றர் உயரமும் உடைய சுவருக்கு 2 லீற்றர் தீந்தை தேவையெனின், 40 மீற்றர் நீளமும், 5 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குத் தேவையான தீந்தை எவ்வளவு?

   1. 3 லீற்றர்   2. 2 லீற்றர்   3. 4 லீற்றர்

**பின்வரும் விபரம் ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களைப் பற்றியது.**

☆ பழம் தரும் மரங்கள் 10   ☆ பழம் தரும் மரங்கள் அல்லாதன 20

☆ மாமரங்கள் 4   ☆ தென்னைகள் 4

26. இவ்விபரங்களுக்கு ஏற்பத் தோட்டத்தில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

   1. 30 மரங்கள்   2. 38 மரங்கள்   3. 34 மரங்கள்

27. 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 1, 8, 15, 22, 29 ஆகியன சனிக்கிழமைகளின் இந்த எண்களின் கூட்டுத்தொகை 75 ஆகும். இம்மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

   1. 70   2. 71   3. 80

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்து கோடிடுக.**

28. நெல் - நாற்று   கத்தரி - ?

   1. மரம்   2. கன்று   3. செடி   4. வடலி

29. தென்னை - குரும்பை   பனை - ?


   1. வடு   2. மூசு   3. கச்சல்   4. நுங்கு

30. ஓவியன் - சித்திரம் வரைதல்சிற்பி - ?

   1. கவி எழுதுதல்   2. மட்பாண்டம் செய்தல்
   3. சிலை வடித்தல்   4. தளபாடம் செய்தல்

30.

A   B



இவ்விரு உருக்களுள்,

   1. A மாத்திரம் சரியானது
   2. B மாத்திரம் சரியானது
   3. A,B இரண்டும் பிழையானது
   4. A,B இரண்டும் சரியானது

சபை, யாழ்ப்பாணம்.




# பொய் பேசுவதில் கில்லாடிகள்



கனேடிய ஆய்வாளர்களின் சமீபத்திய ஆய்வு முடிவு ஒன்று சமூகத்தின் அனைத்து மட்டத்தினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி யுள்ளது. இளவயதினரிடையேதான் அதிக பொய் பேசும் வழக்கம் உள்ளதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதையெல்லாம் தவிடு பொடி யாக்கியிருக் கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

பொதுவாக குழந்தை களைவிட பெரியவர்கள் தான் அதிகம் பொய் சொல்கின்றனர் என்று கூறியிருக்கிறது புதிய ஆய்வு. கனடாவின் ஒட்டாவா பல் கலைக்கழகத்தில் இது தொடர் பாக சமீபத்தில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.எந்த வயதினர், எந்தச் சூழ்நிலையில், எந்த அளவுக்கு பொய் சொல்கின்றனர் என்பது உட்பட பல்வேறு அம்சங்கள் அலசி ஆராயப்பட்டன. குழந்தைகள் அதிகம் பொய் சொல்வதாகத் தெரிந்தாலும், உண்மையில் இதில் முதலிடம் வகிப்பது வயதானவர்கள்தான். குழந்தைகள், இளைஞர்களைவிட மூத்த குடிமக்கள் “எமோஷன்” ஆவதால் அதிகம் பொய் பேசுகின்றார்கள். வயதானவர் களைவிட குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கவலை, பொறுப்பு, எதிர்பார்ப்புகள் குறைவு. இப்படிப் பேசினால் அதன் பின்விளைவு எப்படியாக இருக்கும் என்று ஆழ்ந்து யோசிக்கின்றனர். பட்டென்று அவர்கள் உண்மையைப்பேசிவிடுவதில்லை. யோசித்துப் பேசுவதால் பலவற்றை மறைக்கின்றனர். அவசரப்பட்டுப் பேசுவதால் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர். சமயோசிதமாக நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளதால் சூழ்நிலைக்குத் தக்கவாறு பேசவேண்டி இருக்கிறது.

# சாதனை



1974ஆம் ஆண்டு அமெரிக்காவில் கட்டப்பட்ட மிகவும் உயரமான கட்டடம் ‘சியர்ஸ் கோபுரம்’ என்றும் இப்போது ‘வில்ஸ் கோபுரம்’ என்றும் அழைக்கப்படுகின்றது. 110 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடம் உலகின் ஐந்தாவது உயரமான கட்டடமாகும். இங்கு செல்பவர்கள் 103ஆவது மாடியிலிருந்து கட்டடத்தின் வெளிப்பகுதியில் இருந்து காட்சிகளைப்பார்ப்பதற்காக கண்ணாடிக்கூடுகளும் அமைக்கப் பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தக்கண்ணாடிக்கூண்டுக்குள் இருந்து சுமார் ஐம்பது மைல் தூரப் பரப்பளவை மிகத்தெளிவாக எந்தத்தங்குதடையும் இன்றி காணலாம். காரணம் பார்வையை மறைக்கும் அளவுக்கு சுற்றுமுற்றிலும் உயரமான கட்டடங்கள் எதுவுமே கிடையாது.

இங்கு முற்றிலும் எதிர்ப்பாராத விதத்தில் ஒருவர் ஒரு வித்தையைச்செய்து காட்டியபோது எடுக்கப்பட்டது தான் இந்தப் படம்.

ஒரு கண்ணாடிக்கூண்டுக்குள் இருந்து கேபிள் ஒன்றின் உதவியோடு வெளிப்பகுதி ஊடாக இன்னொரு கண்ணாடிக்கூண்டை அவர் தொட்டார்.

அதுவும் தலை கீழாகத்தொங்கிக் கொண்டு. இந்த நபர் யார் என்பது அடையாளம் காணப்படவில்லை.

ஆனால் அவரின் செயல் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. சுமார் 1353 அடி உயரத்தில் அவர் அந்தரத்தில் தலை கீழாகத்தொங்கினார்.

# மிதக்கும் மைதானம்



சிங்கப்பூரில் உள்ள மெரினா வளைகுடாப் பகுதியில் இந்த மிதக்கும் கால் பந்து விளையாட்டு அரங்கம் அமைக் கப்பட்டுள்ளது. எஃகினால் உருவாக் கப்பட்ட இந்த அரங்கம் 120 மீட்டர் நீளமும் 83 மீட்டர் அகலமும் கொண்டதாகும்.

மிதக்கும் விளையாட்டு அரங்கத்தில் 30,000 மக்கள் அமர்ந்து பார்க்கும் வசதி உள்ளது. அரங்கத்தை விட்டு வெளியில் செல்லும் பந்தை எடுக்க அரங்கத்தை சுற்றி படகுகள் நிறுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளை ஆலயம்



வெள்ளை நிறப் புத்தர் ஆலயம் தாய்லாந்தில் சிங்ராய் நகரத்தில் உள்ளது. இந்த ஆலயம் 1997 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளை நிறக்கோவிலை வடிவமைத்தவர் கோசிட்பிட் என்பவர் ஆவார். வெள்ளை நிறம் புத்தரின் அமைதியையும் தூய்மையையும் வெளிப்படுத்துவதாகும். இதன் வடிவமைப்பு மக்களை கவர்ந்திழுக்கக் கூடியதாக உள்ளது.

# கடலில் விவசாயம்



இன்று உலகைக் கவலைக்குள்ளாக்கிக்கொண்டிருக்கும் விடயங்களில் ஒன்று, புரதப்பற்றாக்குறை. மனிதனின் இயல்பான வளர்ச்சிக்குப் புரதச்சத்து மிகவும் அவசியம். வளர்ந்து வரும் நாடுகளில் புரதப் பற்றாக்குறை அதிகம் காணப்படுகிறது. அதிலும், சமூகத்தின் கீழ்மட்ட நிலையில் உள்ளவர்களிடம்.

இந்தப் புரதப் பற்றாக்குறை, நாட்டின் பொருளாதார வளர்ச்சியையே பாதிக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். உணவில் புரதச் சத்துக்குறையும்போது ஒருவரின் உடல் வளர்ச்சியும், மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. இதனால் அவரிடம் சோம்பேறித்தனம் அதிகமாகிறது. உழைப்புக் குறைகிறது. எனவே, நாட்டின் வருமானமே பாதிக்கப்படுகிறது. இந்த முக்கியப் பிரச்சினைக்குத்தீர்வு காண இன்னொரு வழி இருக்கிறது. அதுதான், கடல்களில் பயிரிடுதல். பாசி இனத்தைச் சேர்ந்த தாவரங்கள் கடலில் நிறைய வளருகின்றன. இவை அதிவேகமாக வளரக்கூடியவை. எனவே, கடலில் பாசியைப் பயிரிடுவதன் மூலம் புரத உணவுப் பற்றாக்குறைக்கு ஒரு முடிவு கட்டிவிடலாம் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்ட நாடு ஜப்பான்தான். அந்நாடு, தற்போது 60 ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான கடற்பரப்பில் பாசியைப் பயிர் செய்து வருகிறது. ஜப்பானியர்கள் பயிர் செய்யும் ‘போர்பைரா’ என்னும் பாசி, புரதச்சத்து நிறைந்தது. அந்த வகையில் இது அசைவ உணவுக்கு ஒப்பானது. இன்று இது ஜப்பானியர்களின் தினசரி உணவு வகைகளில் ஒன்றாகிவிட்டது.


# ஆண் ஒருவன் பெண்



ஆணாக இருந்து பெண்ணாக மாறுகின்றமைக்கு பால் மாற்றுச்சிகிச்சை செய்து கொண்ட ஒருவர் அவரது பால் மாற்றத்தின் ஒவ்வொரு கட்டங்களையும் புகைப்படங்களாக பிடித்துக் கொண்டார்.

அவற்றைக் கடந்த வருடம் ஆவணங்களாக வெளியிட்டார்.

# கோப்புக்களை மீட்டெடுப்பதற்கு...




சில முக்கியமான கோப்புகளை மிகவும் கவனமாக பாதுகாப்போடு வைத்திருப்போம். சில நேரங்களில் அந்தக் கோப்புகள் பழுதடைந்துவிடும். அவ்வாறு பழுதடைந்த கோப்புகளை மீட்டெடுப்பது என்றால் சாதாரண விடயம் அல்ல. அலுவல் சம்பந்தப்பட்ட கோப்புகள் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது போர்ட்டபிள் டிவைஸ் பென்ட்ரைவ், சீடி/வீடி மற்றும் ப்ளாஷ் ட்ரைவ்களில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்வோம்.

இவ்வாறு கோப்புகளை இடமாற்றம் செய்யும் போது சேதமடைய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு சேதமடையும் கோப்புகளை மீட்டெடுக்க File Repair என்னும் மென்பொருள் உதவுகிறது. மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி கணினியில் நிறுவிக்கொள்ளவும். பின் இந்த அப்ளிகேஷனை ஓப்பன் செய்யவும். அதில் எந்தக் கோப்பினை மீட்டெடுக்க வேண்டுமோ அதை தேர்வு செய்யவும். பின் Start Repair என்னும் பொத்தானை அழுத்தி இழந்த கோப்பினை மீண்டும் பெற முடியும். இந்த மென்பொருளின் மூலமாக சேதமடைந்த பல்வேறு போர்மட்டுடைய கோப்புகளை மீட்டெடுக்க முடியும்.

தரவிறக்க சுட்டி- **http://www.filerepair1.com/files/file-repair-setup.exe**

கணினி மூலை

# கறுப்புப் பணம், ஊழலுக்கெதிராக உண்ணாவிரதமிருந்த பாபா ராம்தேவை பொலிஸார் அப்புறப்படுத்தினர்

## எதிர்ப்புத்தெரிவித்த ஆதரவாளர்கள் மீதும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

(புதுடில்லி)

கறுப்பு பணம், ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கிய பாபா ராம்தேவ் நேற்று முன்தினமிரவு பொலிஸ் படையினரால் பந்தலில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டார். இவர் கைது செய்யப்படுவதாக அறிந்த பாபாவின் ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனையடுத்து கண்ணீர்ப்புகைகுண்டு வீச்சு நடந்தது. போராட்டத்திற்கான அனுமதி பொலிஸார் வழங்கவில்லை என றும், இதனால் இவர் அப்புறப்படுத்தப்பட்டார் என்றும், இவர் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பதட்டத்தைத் தணிக்க மைதானத்தை சுற்றிலும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி யும், அன்னிய நாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்புப்பணத்தை மீட்டுக் கொண்டு வர வலியு றுத்தியும் யோகா குரு பாபா ராம்தேவ், சாகும் வரைஉண்ணா விரதப் போராட்டம் இருக்கப் போவதாக அறிவித்தார். இந்தப் போராட்டம் நடந்தால், பிரச்சினை ஏற்படும் எனக் கருதிய மத்திய அரசு, உண்ணாவிரதத்தை வாபஸ் பெற வைக்க கடும் முயற் சிகளை மேற்கொண்டது. மூத்த மத்திய அமைச்சர்கள், பாபா ராம்தேவுடன் பேச்சு நடத்தினர். மத்திய அரசு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்ததை அடுத்து,



நேற்று முன்தினம் காலை முதல் உண்ணாவிரதப் போராட் டத்தை ராம்தேவ் தொடக்கினார். ராம்தேவ் உண்ணாவிரதத்தை தொடங்கிய நேற்று முன்தினம் இரவே, பொலிஸார் அவரை உண்ணாவிரதம் நடத்தமுடியாமல் அப்புறப்படுத்தினர்.

இதேவேளை, ராம்தேவின் உண்ணாவிரதத்தை குலைத்த துடன், அவரது ஆதரவாளர்கள் மீது கண்ணீர்ப்புகைவீச்சுத் தாக்குதல் நடத்திய பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்க்கட் சியான பாரதீய ஜனதா கண்டித்துள்ளது.

## இந்தியச் செய்திகள்

# அக்னி - 5 ஏவுகணை விரைவில் சோதனை

(சென்னை)

அக்னி -5 ஏவுகணையை விரைவில் சோதிக்கத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

5000 கி.மீ. தொலைவைத் தாண்டி கண் டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கவல்ல சக்தியை கொண்டது அக்னி -5 ஏவுகணை.

சீன எல்லையில் பதற்றம் நிலவுவதால் இந்திய இராணுவத்தின் பலத்தை நிரூபிக் கும் வகையில் அக்னி -5 ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர். சீனாவிடம் உள்ள ஏவுகணை 11200 கி.மீ. தொலைவிலான இலக்கை குறிப் பார்த்து தாக்கவல்லது என்பது குறிப்பிடத் தக்கது

# தமிழக ஆளுநர் மாற்றம்



தமிழக ஆளுநராக முன்னாள் தலைமைத் தேர் தல் ஆணையர் நவீன் சாவ்லா நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக ஆளுநராக இருக்கும் பர்னாலாவின் பதவிக்காலம் இன்னும் சில வாரங்களில் முடி வடையவுள்ளது. இதையடுத்து அடுத்த ஆளுநர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. புதிதாக அமைந்துள்ள அதிமுக ஆட்சியுடன் இணக்கமாக செயல்பட காங்கிரஸ் கட்சியும், அதன் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் முடிவு செய்திருப்பதால் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இணக்கமான ஒருவரை ஆளுநராக்க தீர்மானித்துள்ளது. அந்த வகையில் நவீன் சாவ்லாவின் பெயர் முதன்மையாக அடிபடுகிறது.

வரும் காலத்தில் திமுகவை உதறி விட்டு அதிமுகவுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் தலைமை தீர்மானித்திருப்பது அதன் சமீப கால நடவடிக்கைகளிலிருந்து உணர முடிகிறது. எனவே தனக்கும், அதிமுக வுக்கும் இணக்கமான நவீன் சாவ்லாவை ஆளுநராக்க காங்கிரஸ் கட்சி விரும்புகிறது.

# நீதிமன்ற கோடைவிடுமுறைக்கு பின்னரே கனிமொழியின் பிணைமனு மீதான தீர்ப்பு



(புதுடில்லி)

2 -ஜி வழக்கில் தி.மு.க. தலைவர் கருணா நிதியின் மகளும், எம்.பியுமான கனிமொழியின் பிணை மனு மீதான தீர்ப்பு நீதிமன்றத்தின் கோடை விடுமுறைக்குப் பின் அறிவிக்கப்படும் எனத் தெரி கிறது. இதனால் மேலும் ஒரு மாதம் கனிமொழி திகார் சிறையில் இருக்க நேரிடும். திகார் சிறை யில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழி ஜாமீன் கோரி டெல்லி ஐகோர்ட்டில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு மீது விசாரணை முடிந்து விட்டது. தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் கடந்த வெள் ளிக்கிழமை தீர்ப்பு வெளியாகலாம் என்று கூறப் பட்டது. ஆனால் டெல்லி நீதிமன்றத்துக்கு கோடை விடுமுறைக் காலம் நேற்று முதல் தொடங்குவதால் மேலும் ஒரு மாதம் கனிமொழி சிறையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.


## வாழ்க வளமுடன்

### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில் இன்று




பெயர்: மு. தினோஜ்ஜெறி

முகவரி: கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்


# தமிழ் புத்தாண்டிற்கு பொருத்தமான நாள் சித்திரை முதலாம் திகதியென அறிவிப்பு

(மதுரை)

சித்திரை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என மதுரை ஆதீனம் ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழர்கள் பெரு வாரியாக வாழும் இடங்களில் எல்லாம் தமிழ்ப் புத் தாண்டை கொண்டாடி வருகின்றனர். சித்திரை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாளாகும். இந்நாளில்தான் ஆதீனங்களிலும், திருமடாலயங்களி லும், பூஜைகள், வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும்.

மேலும் இந்த இடங்களில் அன்றுதான் பஞ்சாங்கம் வாசித்துக் காட்டுவதும் மரபாக இருந்து வருகிறது. அதில் நாட்டின் நிலை குறித்த பல்வேறு செய்திகள் வானிலை, பூமி தொடர்பான தகவல்கள், விவசாயம், அரசின் மக்கள் நல நடவடிக்கைகள் போன்றவை



விரிவாக எடுத்துரைக்கப்படும். எனவே சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுக்கு பொருத்தமான நாளாகும். இவ்வாறு ஆதீனம் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# கமல், பிரபு உட்பட்ட திரை நட்சத்திரங்கள் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து வாழ்த்து

(சென்னை)

கமல்ஹாசன், பிரபு, விஜய் உட்பட்ட முன்னணி திரை நட்சத்திரங்கள் தமிழக முதல்வர் ஜெயலலி தாவைச் சந்தித்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

3ஆவது முறையாக தமிழகமுதல் அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட ஜெயலலிதாவை, முன்னணி திரைப்பட நடிகர் கமலஹாசன், நடிகை கவுதமி, மகள் அக்ஹர ஹாசன், சுப்புலட்சுமி, நடிகர் பிரபு மற்றும் அவரது மனைவி, பிரபுவின் சித்தப்பா மகன் கிரி சண்முகம் மற்றும் அவரது மனைவி, பிரபுவின் சம்பந்தி மதிவாணன் மற்றும் அவரது மனைவி, ராம்கு மாரின் மகன் துஷ்யந்த், நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தையும் திரைப்பட இயக்குனருமான எஸ்.ஏ.சந்திர சேகரன், பழம்பெரும் நடிகர் வி.எஸ்.ராகவன், பழம்பெரும் நடிகைகள் சி.சுகுமாரி, குமாரி சச்சு என்கிற பி.எஸ்.சரஸ்வதி, எஸ்.என்.லட்சுமி, ராஜஸ்ரீ, காஞ்சனா, பின்னணிப் பாடகி எல்.ஆர்.ஈஸ்வரி, திரைப்பட தயாரிப் பாளர் ஜெயந்தி ஏ.எல்.எஸ்.கண்ணப்பன், ஒளிப்பதி வாளர் பாபு ஆகியோர் சந்தித்து, நல்ல பல திட்டங் களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்கு தங்களின் மகிழ்ச்சி கலந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அவர்களின் வாழ்த்துக்களை பெற்றுக் கொண்ட முதல் அமைச்சர் ஜெயலலிதா, திரைப்படத் துறையினர் தன்னை நேரில் வந்து சந்தித்து பாராட்டியமைக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

உ



# காரைநகர் சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரம்

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் -06.06.2011



## பிரதம குருவின் ஆசிச் செய்தி

காரைநகர் திண்ணபுரம் பதியில் எழுந்தருளி யிருந்து அருளாட்சி புரியும் சௌந்தராம்பிகை உடன் உறையும் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சி தருகிறது.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் தில்லை நடராஜப் பெருமானும் பூரணை புட்கலை சமேத ஆண்டி கேணி ஐயனாரும் இந்த ஆலயத்தில் எழுந்தருளி அடியவர்கள் வேண்டும் வரம் அளித்து வருகிறார்கள்.

இலங்கையில் முதன்முதலாக சைவமும் தமிழும்தழைத்தோங்கும் காரைநகரில் அமைந்துள்ள இத்தலத்தில் 33 குண்டபட்க்ஷ மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சி தருகிறது.

ஈழத்திலே சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தைப் பிரதம குருவாக இருந்து செய்யும் பெரும் பாக்கியத்தை நடராஜப்பெருமான் அருளால் பெற்றிருக்கிறேன். அனைத்து அடியார்களுக்கும் இறை அருளும் கும்பாபிஷேகப் பலனும் சகல சௌபாக் கியங்களும் கிடைக்க எல்லாம் வல்ல சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் ஆண்டிகேணி ஐயனாரையும் வேண்டி ஆசி பல கூறி அமைகிறேன்.

**பிரதிஷ்டதிலகம்**
**சிவஸ்ரீ.க.ச.சோமஸ்கந்தக் குருக்கள்,**
**கும்பாபிஷேக பிரதம குரு.**

## மூதறிஞரின் ஆசிச் செய்தி

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதை எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்து நிற்கின்றேன். தொண்ணூற்றைந்தாவது அகவை நிறைவுறும் வேளை அடியேன் ஆடல் வல்லான் திருத்தலத்தில் நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழாக்காணும் பேறு கிடைக்கப்பெற்ற மையை எண்ணி எம்பெருமான் திருவருளை வியந்து குடமுழுக்குப் பெருவிழா சிறப்புற வாழ்த்தி வணங்கி நிற்கிறேன்


மூதறிஞர் கலாநிதி பண்டிதர்
க.வைத்தீசுவரக் குருக்கள்,
ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

## ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்களின் ஆசிச் செய்தி

சௌந்தராம்பிகா சமேத சுந்தரரேஸ் வரப் பெருமானின் திருவருளால் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வாலயத்தில் முதன்முதலாக திருப் பணி நிறைவேற்றி கும்பாபிஷேகம் செய்த 'அம்பலவி முருகர்' தொடங்கி இன்று திருப்பணி நிறைவேற்றி கும்பாபிஷேகம் காணும் அடியார்கள் சபை ஈறாக திருப்பணி செய்த அனைத்து தொண்டுள்ளங்களுக்கும் எம்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

திரு.ஆ.அம்பலவிமுருகன்
திரு. மு. சுந்தரலிங்கம்
ஆதீன கர்த்தாக்கள்,
ஈழத்துச் சிதம்பரம்.

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்



இலங்கையில் உள்ள பழம்பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ்வரப் பெருமானின் ஆலயமும் ஒன்றாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைப் பெற்றுள்ள இவ்வாலயம் தமிழகத்தில் தலைசிறப்புப் பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புடையது. இதனால் இத்தலத்துக்கு 'ஈழத்துச் சிதம்பரம்' என்ற பெயர் வழங்கலாயிற்று.

இக்கோயில், யாழ்ப்பாணத்தின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியான காரைநகரில் வடகிழக்குத் திசையில் கசோறினா சுற்றுலா மையத்துக்கு அண்மையில் 'திண்ணபுரம்' என்னும் திருப்பதியில் அமைந்துள்ளது.

பண்டைக்காலத்தில் காரைநகரில் சிறப்புற்று விளங்கியது 'வியாவில் ஐயனார் ஆலயம் ஏழு நிலைக்கோபுரத்துடன் கட்டப்பட்ட இவ்வாலயக் குடமுழுக்கு விழாவுக்கு குளக்கோட்டு மன்னன் திருவுத்தரகோசமங்கையில் இருந்து சுந்தரேஸ்வரக் குருக்களையும், மங்களேஸ்வரக் குருக்களையும் அழைத்து வந்தாரென்றும், இவர்களையே கோயில் அர்ச்சகர்களாக நியமித்தார் என்றும் வரலாறு கூறுகிறது. இவர்களது வழித்தோன்றல்களே ஈழத்துச் சிதம்பரத்தில் 64 ஆண்டுகள் சிவாச்சாரியராகப் பணிபுரிந்த சிவஸ்ரீ கணபதி சுவரக்குருக்கள். அவரது புதல்வர் மங்களேசுவரக் குருக்கள். இன்று பிரதம சிவாச்சாரியாராக விளங்கும் ஈசுவரக் குருக்கள் ஆகியோராவர்.

செல்வச் செழிப்புடன் விளங்கிய வியாவில் ஐயனார் கோயிலை கி.பி. 1618 இல் போர்த் துக்கேயர் இடித்துச் சூறையாடினர். ஐயனார் மூல விக்கிரகம் அன்பர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்டு திண்ணபுரத்தில் புதைத்து வைக்கப்பட்டதாகவும், ஆண்டி என்னும் பெரியார் வியாவில் ஐயனாரைத் தரிசிக்க வந்தபோது ஆலயம் இடிக்கப்பட்டு சிதைவுற்ற நிலையில் இருந்ததைக் கண்டு மனம் வருந்தியபோது, தெய்வீகக் குறிப்பால் திண்ண புரத்துக்குச் சென்றுதான் கொண்டுவந்த சூலத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

சிறிதுகாலம் செல்ல அந்த இடத்தில் கேணி ஒன்றைத் தோண்டியபோது 'பூரணை புட்கலை சமேத ஐயனார் விக்கிரகம்' ஒன்றைக் கண்டெடுத்து, அவ்விடத்தில் கோயில் கட்டி வழிபட்டு வந்தார்.

ஆண்டி தோண்டிய கேணியில் இருந்து வெளிப்பட்டவராகையால் இன்றும் 'ஆண்டிகேணி ஐயனார்' என்ற திருநாமம் வழங்கி வருகிறது.

முதன் முதலில் இவ்விடத்தில் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்தவர் அம்பலவி முருகர் ஆவார். காலக்கிரமத்தில் அம்பலவி முருகராலும் அவரது சந்ததியினராலும் சுந்தரேஸ்வரப் பெருமான், சௌந்தராம்பிகை, விநாயகர், சுப்பிரமணியம், நடராஜப் பெருமான், சோமஸ்கந்தர் முதலான மூர்த்திகளுக்கும் ஆலயம் கட்டப்பட்டு இன்று ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயருடன் புகழ்பெற்று விளங்கும் ஆலயமாகப் பரிணமித்துள்ளது. இவ்வாலயத்தில் இன்று காணப்படுகின்ற நடராசர் திருவுருவம் மிகவும் சிறப்பானது.

வியாழகிரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் திருவடியின் இரு மருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத் திருவாசியுடன் காணப்படுகின்றது.

இத்திருவுருவத்தை ஈழத்துச் சிதம்பரத்திலேயே தங்கியிருந்து வார்த்துக் கொடுத்தவர் சோழபுரத்துக் குருசாமி ஆசாரியார் அவர்கள்.

மேலே குறிப்பிட்ட பாவனையில் காணப்படுகின்ற நடராஜர் திருவுருவம் இந்தியாவிலே ஓரிரு இடங்களிலே மட்டும் காணப்படுவதாக சிற்பக்கலையில் நிபுணரான திரு.தொ.மு.பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் கூறியுள்ளார்.

இவர் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசிக்க முன்பு அழகும் அற்புதமும் நிறைந்த நடராசர் திருவுருவத்தைப் பற்றி மேற்கண்டவாறு குறிப்பிட டுள்ளார்.

## பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடா தாரோ' எம்பெருமான் எம்மையெல்லாம் ஆட்டுவிக்கின்றான். ஆடுகிறோம். அவ்வளவுதான். இதுவரை காலமும் எம்பெருமான் சந்நிதியில் உட்பிரகார வேலைகளை அழகுற நிறைவேற்றிய திருப்பணிச் சபை அன்பர்களுக்கும் அவன் அருள்கிடைக்க வேண்டுதல் செய்கின் றேன்.

இன்று கும்பாபிஷேகப் பெருவிழா வைச் சிறப்புற நிறைவேற்றும் பேறு பெற்ற அடியார்கள்சபை அன்பர்களுக்கும் அவன் அருள்கிடைக்க வேண்டுதல் செய்கின் றேன்.

அனைத்து அடியவர்களும் நல் மனத்தால் ஒன்றுபட்டு, எதிர்காலத்தில் எம்பெருமான் சந்நிதியில் தூய திருப் பணிகள் செவ்வனே நிறைவேற்றிட சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும், ஆண்டிகேணி ஐயனா ரையும் வேண்டி கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்தி அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் கிடைக்க ஆசி கூறி நிற்கி றேன்.

சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்
ஈழத்துச் சிதம்பரம்,
பிரதம சிவாச்சாரியார்.

## அனுசரணையாளர்கள்


நல்லூர்
சரவணா ரெக்ஸ்
ஆடைகளின் சாம்ராஜ்யம்
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி) (சிவன்கோயில் அருகாமை) யாழ்ப்பாணம்.
770, 772, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 0421
(C/751)

சிவனருள் பெற்று இன்பமடைவோம்.
அனைத்து வகை மருந்து, பால்மா, இதர பொருட்களுக்கும்
R.V.G. PHARMACY
R.V.G. ஸ்தாபனம் 58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
R.V.G. Pharmacy 504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
(C/748)

அனைவருக்கும் அருள் கிட்ட பிரார்த்திக்கும்
சுந்தர்சன்
சுந்தர்சன் யாழ். வீதி, மானிப்பாய்.
T.P : 021 225 5136
(C/750)

நம்பிக்கையும் நாணயமும் ஒரே இடத்தில்!
புதிய
வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை. (செலான் வங்கி அருகில்)
0776002588
0215672588
இணை நிறுவனம்
Mobil Plaza Phone Shop
பிரதான வீதி, சங்கானை
0779352902
(HNB அருகில்)
(C/747)

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
கஜசங்கவி சென்ரர் அன்ட் பிறிண்டேர்ஸ்
ஓவ்செற் அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங்.
இல.237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 7885
(C/749)

பரணி
கிறீம் ஹவுஸ்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.
T.P : 0779186284
(C/761)

# இலங்கையில் உள்ள இனப்பிரச்சினை இந்தியாவுக்கு வெளிப்பிரச்சினை அல்ல

வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த மே மாதம் மூன்று நாள் (15-17) சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்தபின் இரண்டு அரசாங்கங்களாலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் மீண்டும் ஒரு முறை இந்தியா - இலங்கை இடையே உள்ள உறவுகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

எனது கருத்துப்படி இந்தியா - இலங்கை உறவு பற்றிய விடயங்களுக்கு மோதலின் பின்னான நிலைமைகளுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் திரும்பச்சென்று மற்றும் பூகோள – அரசியல் யதார்த்தங்களைக் கொண்ட கொள்கை அமைப்பினை அபிவிருத்தியாக்கி, அத்துடன் பயனுள்ள மற்றும் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். தற்போதைய அரசாங்கம் கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளை தொடக்கம் முதலே முக்கியத்துவப் படுத்தினால், அவை அடிப்படையில் சரியானவை என்றே கூறலாம். ஆனால் எப்படியிருந்த போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் கணிசமான அளவு தந்திர நுட்பங்கள் தேவைப்படுகின்றன.

இலங்கை, இந்தியாவுக்கு எதிரான அக்கறையை வெளிக்காட்டியிருப்பது, ஆயுத மோதல்களை ஏற்படுத்துவதற்கு வழிகோலிய அடிப்படை விடயங்களுக்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மனிதாபிமான மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணவேண்டிய அவசியத்தை.

அநேக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. கூட்டுப் பத்திரிகை அறிக்கை இந்த விடயங்களைப்பற்றி பின்வரும் வார்த்தைகளால் மீளவும் வலியுறுத்துகிறது:

"இருபகுதியினரும் ஏற்றுக் கொண்டிருப்பது, இலங்கையில் நடைபெற்று முடிந்த ஆயுத மோதல்கள் குடியமர்த்துவது, அவசரகாலச் சட்டத்தை விரைவில் நீக்குதல், மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரித்தல், பாதிக்கப்பட்ட இடங்களில் வழமை நிலையை ஏற்படுத்துவது, மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மனிதாபிமான அக்கறையுடன் உதவிகளை வழங்குதல் என்பன உட்பட்ட விடயங்களை உத்தரவாதப்படுத்தும்படியும் கேட்டுக் கொண்டார்".

இந்தக் கூட்டறிக்கையை விசேடமாக இந்த இரண்டு பகுதிகளையும் கண்டனத்துக்கு உட்படுத்துபவர்கள் எழுப்பியிருப்பது, பாரம்பரிய விவாத

எனவே இந்தத் தலைப்பின் கீழ் இலங்கை மிகப் பெரிய பிரசங்கம் ஒன்றைத் தயார் படுத்த வேண்டியுள்ளது. அதனை செழிப்பாக்குவதற்கு உண்மையாக பலவேறுபட்ட சமூகங்களைக் கொண்ட இந்தியாவின் நீண்ட அனுபவத்தை அதனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இந்தியாவின் இந்த உயர்வான அனுபவம் நிரூபித்திருப்பது அதிகாரப் பகிர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் என்பன பிரிவினையல்ல, ஆனால் பல்வேறுபட்ட சமூகங்களை ஐக்கியப்படுத்துவதற்கு வாய்ப்பான ஒன்று என்பதை.

சேவையில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பலர் என இலங்கையில் பற்றுக் கொண்ட பலரும் எழுப்பும் விடயம் என்னவென்றால், இலங்கை தூதுக்குழுவினர் இந்தியாவுக்கு வருகை தரும் வேளைகளில் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிய வாக்குறுதிகளை அளிப்பதில் உண்மையிலேயே நேர்மையானவர்களாக இருந்தால், அதற்கும் மேலாக சர்வதேச அமைப்பில் இலங்கைக்கு உதவி செய்வதற்கு வேண்டிய சகலதையும் இந்தியா செய்துள்ளது என அவர்கள் வாதிடுகிறார்கள். ஆனால் அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான விடயத்தில் இலங்கை இதுவரை அதன் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.



வெளிநாட்டுக் கொள்கையை 1984இல் மாற்றிக்கொண்டது. ஆனால் 2005இற்குப் பிறகு நடந்தவைகளைப் பற்றிய துல்லியமான, தெளிவான மற்றும் விளக்கமான வரைவிலக்கணம் தேவை. சுயாதீனத் தொலைக்காட்சியுடனான ஒரு நேர்காணலில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளில் உள்ள மூன்று பிரதான உருவாக்க அம்சங்களைப்பற்றி விளக்கியிருந்தார்.

அவையாவன:

இலங்கை ஒரு கூட்டுச் சேரா நாடு என்கிறவகையில், சகல நாடுகளுடனும் அவற்றின் அரசியல் மற்றும் பொருளாதார முறைகளைப் பொருட்படுத்தாது நட்பான உறவினைத் தொடர்ந்தும் பேணி வரும்.

இலங்கை மரபுவழி மேற்கத்தைய பாரம்பரிய முன்னுரிமைகளைக் கொண்ட அதன் வெளிநாட்டுக் கொள்கைகளில் இருந்து விலகி, இந்து சமுத்திரத்துக்கு உள்ளேயும் அதைச்சுற்றியும் உள்ள நாடுகளை நோக்கிய விதமாகவும், மற்றும்

இலங்கை இந்தியாவின் உள்நாட்டு மற்றும் சர்வதேச அக்கறைகளுக்கும் நலன்களுக்கும் மதிப்பளிக்கும் விதத்தில் தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது.

இதில் முக்கியமானது மூன்றாவதாகக் குறிப்பிட்ட பிரதானமான அம்சம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளின் சமன்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் அதிவிசேடமாக நண்பர்கள் மற்றும் உறவுகள் என்கிற சொற்களைப் பயன்படுத்தி இந்தியாவை தனித்துவமாக கோடிட்டுக் காட்டியிருப்பது.

மோதலின் பின்னான நிலைமையில், இந்தியா அநேக தடவைகளில் தனது நிலுவையிலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் புரிந்துணர்வுள்ள மனோபாவத்துடன் கூடிய தீர்வை ஏற்படுத்துவதோடு மற்றும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் பார்வையுடன் நியாயமான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பணியை உருவாக்குவதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்தக் கட்டத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தியிருப்பது, அவரது அரசாங்கத்தின் கடப்பாடுகள் தற்போது நடைபெற்றுவரும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் தமிழ்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்துதலும் மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தலுமே ஆகும்.

13ஆவது திருத்தத்துக்கு அமைவான முறையில் உருவாக்கப்பட்ட ஒரு அதிகாரப் பரவலாக்கல் பொதியினை வழங்குவது இத்தகைய நல்லிணக்க நிலைமைகளை உருவாக்குவதற்கான அவசியத்தை நோக்கிய பங்களிப்பாகும்."

கூட்டறிக்கையானது மீள்குடியேற்றம் மற்றும் ஒருமைப்பாடு என்பனவற்றை மேலும் முன்னிலைப்படுத்தியுள்ளது. அது கூறுவது: "இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருப்பது தனது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் பரிகரிக்க முயலும் விடயங்கள் ஆக்கபூர்வமான முன்னிலைப் படுத்தப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் என்பனவாகும்" என்று.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக இந்திய வெளிவிவகார அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் விரிவாக்க நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படி ஊக்கப்படுத்தியதுடன், மீள்குடியேற்றம் மற்றும் நியாயமான நல்லிணக்கம், உள்ளக இடம் பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த வீடுகளில் விடயமான இந்தியா எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிட்டு தலையீடு செய்ய முயற்சிக்கிறது என்பதனையே.

இந்தியாவின் எண்ணம் அதன் வினைத்திறனின் ஒரு பகுதியாக அதன் அயலவர்களின் உறுதிப்பாட்டைக் குலைப்பதுதான் என்று யாராவது இதற்கான மொழிமாற்றாகக் கூறலாம். இந்தச் சந்தேகத்துக்கு ஆதரவான ஆதாரங்களாகக் காட்சி தருபவற்றைக் காட்டிலும், எனது கருத்தில் உதயமாவது

**- சுமணசிறி லியனகே**

அயலவர்களுடனான இந்தியாவின் உறவினை வரைவது வெகு சுலபம். ஏனெனில், இந்தியாவின் உள்நாட்டு அக்கறையானது அதன் அயலவர்களின் கொள்கையுடன் நேரடியான கூட்டினைக் கொண்டிருக்கிறது என்பதே.

உதாரணத்திற்கு இலங்கையின் தமிழ் தேசியப் பிரச்சினை, தமிழ்நாட்டின் உள்ளூர் அரசியலுடன் அதிக அளவில் தொடர்புபட்டிருப்பதால், இந்தியாவுக்கு அதை சாதாரணமான ஒரு வெளிப் பிரச்சினை எனக் கூறமுடியாது. இந்த விடயத்தில் இந்தியாவுடனான இலங்கையின் தொடர்ச்சியான தொடர்புகள் விளக்குவது வெளிப்படையான அல்லது தந்திரமான விடயத் தொடர்புகளின் சம்மதத்தை.

அதற்கும் மேலாக, ஆயுத மோதல்களின் கடைசிக்கட்ட நிகழ்வுகள் சம்பந்தமாக எதிர்கொண்டு வரும் மேற்கின் பிரசாரத்தை தடுப்பதற்கும், நடைபெற்று வரும் நல்லிணக்க முயற்சிகள் நியாயமானது என உலகத்துக்கு காட்டுவதற்கும் இந்தியாவின் ஆதரவை இலங்கை எதிர்பார்க்கிறது. எனவே தமிழ் அரசியற்கட்சிகள் ஏற்றுக்கொள்ளத்தக்க அரச கட்டமைப்பு மற்றும் தாமதப்படாமல் தமிழ் குடிமக்களின் அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்பன தவிர்க்க முடியாத விடயங்களாகின்றன.

சர்வதேச உறவுகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு சாதுர்யமான நடவடிக்கைகளைப் பயன்படுத்தியிருந்தாலும், இந்த சாதுர்ய அரசியல் நீண்டகால வாழ்க்கையில் அதுவும் கிட்டிய அயலவர்களுடனான விடயத்தில் தாக்குப் பிடிக்காது. கூட்டறிக்கை நல்ல கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

எப்படியாயினும், இரண்டு அரசாங்கங்களும் நேரச்சட்டகத்தைக் கொண்ட ஒருவகையான செயற்திட்ட வரைபை அமைத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இருநாடுகளும் தமது சொந்த மக்களிடம் இருந்து கிளம்பும் உள்ளக அழுத்தங்களை மட்டுப் படுத்தியிருக்கலாம். அதேபோல் மேற்கத்தைய வல்லரசுகளிடமிருந்தும் அவர்களால் பின்தாங்கப்படும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் இலங்கை மீது பிரயோகிக்கப்படும் அழுத்தத்தையும் குறைத்திருக்கலாம்.

எனது கருத்துப்படி அவசரகாலச் சட்டவிதிகளை நீக்குவதால் மட்டும் நன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான நிருபணமாகிவிடாது. ஆனால் யுத்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக முறையற்ற கட்டாயச் சட்டங்களையும் நீக்கி ஜனநாயகம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கவேண்டும்.

எங்களது வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒப்புகை மதிப்பு மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது, வியாபாரம், முதலீடு போன்ற மற்றைய பகுதிகளிலும் இந்தியாவின் உடனுழைப்பு பங்களிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மேம்படுத்தப்பட வேண்டும்.

சபை, யாழ்ப்பாணம்.



# ஆற்றலை விருத்தி செய்ய விளையாட்டு மத்திய நிலையம்

## நாமல் எம்.பி பேச்சு



(வவுனியா)

வடபகுதி இளைஞர், யுவதிகளுடைய விளையாட்டு ஆற்றலை ஊக்குவிப்பதற்காக கிளிநொச்சியில் இந்த மாத இறுதியில் விளையாட்டு மத்திய நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வவுனியாவில் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவிக்கும் வைபவம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

யாழ்ப்பாண இளைஞர்களுக்காக பாரியதொரு நீச்சல் தடாகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமெனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வீடுகளுக்கு செல்லும் நீங்கள் உங்களுடைய பொருளாதாரத்தை வளமுடையதாக மாற்றி வாழ்க்கையை உயர்ந்த நிலைக்கு கொண்டு வாருங்கள். ஐக்கியத்துடன் நீங்கள் செயல்படுவீர்களென்று நான் நம்புகின்றேன். உங்களது பிள்ளைகள் சிறந்ததொரு கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுடைய எதிர்காலத்தை சிந்தித்து செயற்படுங்கள்.

அடுத்த உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்படும்போது வடபகுதியிலிருந்தும் திறமையான வீரர்கள் எங்களுடைய தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பெறவேண்டுமென்பது எனது விருப்பமாகும். கிராமப்புறங்களிலிருந்து மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், கல்விமான்கள் உருவாக வேண்டும்.

புனர்வாழ்வு நிலையங்களை விட்டு வெளியேறிச் செல்கின்ற உங்களுக்கு ஒரு சமூகக் கடமையுள்ளது. நீங்கள் சுதந்திரமாக செயற்படமுடியும். தொழில் செய்யலாம். எந்தவொரு துறையையும் நீங்கள் நாடலாம். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடும்பத்தினருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பிரயோசனப்படுத்துங்கள் என்றார்.

அமைச்சர்களான சந்திரசிறி கஜதீர, டலஸ் அழகப்பெரும, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க ஆகியோரும் இங்கு உரையாற்றினார்கள்.

# கிளிநொச்சியில் புதிய பள்ளிவாசல் முஸ்லிம் குடும்பங்களும் மீள்திரும்பின

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, 55 ஆம் கட்டையில் 90 குடும்பங்கள் அண்மையில் மீள்குடியேறியுள்ளார்கள்.

இவர்களுக்கான உலர் உணவு, மீள்குடியேற்ற ஆரம்ப நிதி மற்றும் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் வீட்டுத் திட்டமும் கிடைக்கவிருக்கின்றது.

அதேநேரம், எம்.எப்.சி.டி நிறுவனத்தினால் 20 லட்சம் ரூபா செலவில் புதிய பள்ளிவாசலும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பள்ளிவாசல் ஜுலை மாதம் திறந்துவைக்கப்படவிருப்பதாக பள்ளியின் தலைவர் பி.எஸ்.எம். சரபுல்அனாம் தெரிவித்தார். (19)

# நியாயமான ஓய்வூதியத் திட்டத்துக்கு ஜே.வி.பி. என்றும் ஆதரவு

(கொழும்பு)



தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியமளிப்பதற்கு, புதிய ஆனால் உண்மையான திட்டமொன்றை அரசாங்கம் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவளிக்கத் தயங்கப் போவதில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாடொன்றில் ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பாகக் கூறுகையில்,

ஊழியர்களைப் பாதிக்கும் தற்போதைய திட்டத்திற்குப் பதிலாக புதிய திட்டமொன்றை ஏற்றுக்கொள்ள ஜே.வி.பி. தயார் எனக் கூறினார்.

# படைகளுக்கு ஆதரவளிக்க கோருகிறார் இல. தூதுவர்

(கொழும்பு)

பாகிஸ்தான் பாதுகாப்புப்படைகளுக்கும் அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஜயலத் வீரகொடி கோரியுள்ளார்.

நாட்டில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு பொதுமக்கள் ஆதரவு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து வந்த இளைஞர் தூதுக்குழுவொன்றுக்காக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட வைபவமொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## கடன் அட்டை....

சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து விசாரணை நடத்தியதன் பின்னர் குழி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பண மூட்டைகளை மீட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த நபர் சொந்தமாக அச்சகம் ஒன்றை நடத்திவந்துள்ளதாகவும் பல கடனட்டைகளை வைத்திருந்துள்ளதாகவும் கடனட்டை மோசடியின் மூலம் பெறப்பட்ட பணமே இவ்வாறு வீட்டினுள் மறைத்து வைத்திருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஐ.நா. பதவிக்கு...

அறிவிக்கவில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் எதுவும் பான் கீ மூனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையில் அவர் மீண்டும் 5 வருட காலத்திற்கு இப்பதவிக்கு தெரிவாகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரின் தற்போதைய பதவிக்காலம் இவ்வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையகிறது. எனினும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகியன இத்தேர்தல் நடவடிக்கைகள் துரிதமாக கையாளப்படுவதை விரும்புகின்றன.

இன்று ஆசிய நாடுகளுடனான சந்திப்பொன்றின்போது தான் மீண்டும் போட்டியிடுவதை பான் கீ மூன் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முன்னாள் புலி...

அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகபெரும, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க, மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் உள்ளிட்ட பலர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

புனர்வாழ்வு பெற்ற 860 முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுவிக்க அனுமதி கிடைத்துள்ளது. இவர்களில் ஒரு தொகுதியினர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள்.

ஏனையவர்கள் அடுத்த சில தினங்களில் விடுவிக்கப்படுவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் அனைவரும் குடும்பஸ்தர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் தமது இடங்களுக்குச் செல்ல விசேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தது.

புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் அனைவரையும் இந்த வருட இறுதிக்குள் விடுவிப்பதே அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது என நிகழ்வில் பேசிய அமைச்சர் கஜதீர குறிப்பிட்டார்.

# இந்திய இராணுவ உதவிகளே ஈழப்போராட்ட தோல்விக்கு காரணம்

## வை. கோபாலசாமி கூறுகிறார்



(கொழும்பு)

புரட்சியால் உருவான கியூபா போன்ற நாடுகளின் பச்சைத் துரோகமும், பொதுவுடைமை பேசும் நாடுகளின் தவறான பார்வையும் இந்தியா வழங்கிய நிதி, ஆயுதம், இராணுவ உதவி ஆகியவையே ஈழப் போராட்டத்தின் வெற்றிக்கு தடையாக அமைந்து விட்டன என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசை யுத்த குற்றவாளியென கூறும் ஐ.நா. அறிக்கையை விளக்க நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈழப்பிரச்சினையை தீர்க்க பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் தி.மு.க. தலைவர் கருணாநிதி சரியாகப் பயன்படுத்தி கொள்ளவில்லை. மத்திய அரசுதான் பொறுப்பு என கருணாநிதி தட்டிக் கழித்தார். அதே நிலைப்பாட்டை ஒத்துத்தான் அ.தி.மு.க.வின் முடிவும் இருக்கிறது என்பதை சட்டபேரவையில் ஆளுநர் உரையின் முலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இது நல்ல முடிவு இல்லை என்று ஆட்சியாளர்கள் உணர வேண்டும். இலங்கை அரசை போர் குற்றவாளி கூண்டில் ஏற்றி விசாரிக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார் வைகோ.

## அசையாநிலைப்...

கொண்டிருப்பார்கள்.


இலங்கையைப் பொறுத்தவரை இதுவரை காலமும் பிரதமர் உள்ளிட்ட எந்தவொரு அரசியல்வாதிகளுக்கோ, அல்லது பாதுகாப்புத் தரப்பின் உயரதிகாரிகளுக்கோ அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டதில்லை.

ஆயினும் கடந்த வாரம் முதல் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியவின் பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள இல்லத்திற்கும் அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் நடைபெற்ற பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமை குறித்த மகாநாட்டினை முன்னிட்டு உலகின் பல நாடுகளிலிருந்தும் இராணுவ உயரதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில் ஒரு கௌரவத்திற்காக மட்டுமே இராணுவத் தளபதிக்கு அவ்வாறானதொரு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# வெடித்தது குண்டு; பாகிஸ்தானில் பயங்கரம்

## 7 பேர் ஸ்தலத்தில் பலி



(பெஷாவர்)

பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஏராளமானோர் காயமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன. பெஷாவர் நகரில் உள்ள மட்டானி பகுதியில் இருக்கும் ஒரு பேருந்து நிலையத்தில் இன்று காலையில் ஒரு வாகனம் வந்து நின்ற சிறிது நேரத்தில், அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு பலத்த சப்தத்துடன் வெடித்தது.

இப்பேருந்து நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் குண்டுவெடிப்பில் சிக்கி மூன்று குழந்தைகள் மற்றும் இரு பெண்கள் உட்பட ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன், பத்துப் பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மருத்துவமனையில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இச்சம்பவம் இடம்பெற்ற பேருந்து நிலையம் பாகிஸ்தான் படைத்தரப்பின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் இதுவரை உரிமை கோரவில்லை.

# வினைத்திறனை இழக்கும் சுயதொழில் முயற்சிகள்

## அவசியமாகிறது மீள் மதிப்பீடு

(ஊர்காவற்றுறை)

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டு வரும் சுயமுயற்சித் திட்டங்கள் உரிய முறையில் கண் காணிக்கப்படுவதில்லை.

யாழ்.குடாநாட்டில் தற்போது பல்வேறுபட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட வறிய குடும்பங்களை இனம் கண்டு அவர்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட சுயதொழில் முயற்சிக் கடன் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதும், மேற்படி சுயமுயற்சியாளர்கள் தமது வாழ்வாதாரத்தினை மேற்படுத்துவதற்காக அவற்றினை உச்சமாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் பயிற்சிகளோ, அவர்களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களோ மேற்கொள்ளப்படாமையால் அவர்கள் இடையிலேயே அந்த முயற்சிகளைக் கைவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உரிய திணைக்களங்கள் அவர்களின் சுயதொழில் முயற்சி முன்னேற்றம், உயர்ச்சி என்பவற்றினைத் தொடர்ந்து கண்காணித்து வரத்தவறுகின்றமையால் அவர்கள் போதிய கவனமெடுத்து அத்தொழிலில் ஈடுபடாமல் இருப்பதற்கு வாய்ப்பளிப்பதாகவும், சுயமுயற்சிக் கடன்களை முழுமை யாக வழங்காது பகுதி பகுதியாக அவர்களின் முயற்சியினைக் கண்காணித்து வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தை முன்னகர்த்துவதுடன், கிராமிய அபிவிருத்தியினையும் மேம்படுத்த முடியும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின் றனர்.

மேலும் சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்கும்போது ஒவ்வொரு கிராமத்தினதும் பௌதிக இயல்புகள் மற்றும் சூழல் தன்மைகளை கருத்தில் கொண்டு வழங்குவதன் மூலம் அத்திட்டத்தின் உச்சப்பயனை அடைய முடியும்.

(27)

# கட்டுநாயக்கா சம்பவம் தொடர்பாக தகவல் திரட்டுகிறது படைத் தரப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்களில் முனைப்பாக இருந்தவர்கள், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தவர்களை அடையாளம் காண்பதற்காக வீடியோ பதிவுகள், தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் ஆகியவற்றின் மூலமான தகவல்களை பாதுகாப்பு அதிகாரிகள் திரட்டி வருகின்றனர்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹலுகல்ல இதைத்தெரிவித்துள்ளார்.

தேசிய புலனாய்வுப் பணியகத்திடம் இப்பணி ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர் ஒருவர் மரணமான சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ள தனி நபர் ஆணைக் குழுவிடமும் இத்தகவல்கள் கையளிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் லக்ஷமன் ஹலுகல்ல கூறினார்.

# உக்ரேனுடன் வர்த்தக உறவு ஹக்கீம் சம்சுதீன் விசேட பிரதிநிதி



உக்ரேன் வர்த்தக மற்றும் முதலீட்டு சம்மேளனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதியாக ஹக்கீம் சம்சுதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதற் தடவையாக நியமிக்கப்பட்டுள்ள இவருக்கான இந் நியமனம் உக்ரேன் வர்த்தக மற்றும் முதலீட்டு சம்மேளன செயலகத்தின் முதலாவது பிரதி தலைவரினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனத்திற்கினங்க இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான பொருளாதார வர்த்தக உறவை மேம்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான அந்நிய செலாவணி தொடர்பான தகவல்களை பரிமாறுதல் போன்றன இவரின் பொறுப்புக்களாகும்.

இதற்கு மேலதிகமாக இரு நாட்டு தூதுக்குழுக்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையில் சிறந்த உறவை ஏற்படுத்துவதும் இவரின் பொறுப்பாகும்.

இந்த வருடத்திற்குள் 200,000 உல்லாச பயணிகளை உக்ரேனிலிருந்து இலங்கை கொண்டுவரவுள்ளதாகவும் இலங்கை தேயிலைக்கு சிறந்த சந்தையை உக்ரேனில் பெற்றுக்கொடுக்க வுள்ளதாகவும் உக்ரேன் வர்த்தக மற்றும் மூதலீட்டு சம்மேளனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி ஹக்கீம் சம்சுதீன் தெரிவித்தார்.

உக்ரேன் வர்த்தக மற்றும் முதலீட்டு சம்மேளனத்திற்கு சுமார் 80 நாடுகளில் பிரதிநிதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கிய யானைக் குட்டி பலி

பின்னவல யானைகள் சரணாலயத்திலுள்ள யானைக்குட்டியொன்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மா- ஓயாவில் யானைக்குட்டியின் கால் கற்களில் சிக்கியதால் அது நீரில் மூழ்கியதாக அவர்கள் தெரிவித்தனர்.

இறந்த யானைக்குட்டியின் உடல் பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழக மிருகவைத்திய பீடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பிரேத பரிசோதனை அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் சரணாலயத்தின் சிரேஷ்ட உதவி பணிப்பாளர் ரேணுகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

யானைக்குட்டி நீரில் மூழ்குவதை கண்ட பலர், யானைப் பாகர்களுக்கு அறிவித்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், நீராடிக்கொண்டிருந்த யானைகள் அனைத்தும் கரைக்கு வந்தபின்னர் அவை எண்ணப்பட்டபோதே யானைக்குட்டி உயிரிந்தமை கண்டறியப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 750 ரூபா சம்பளம் வேண்டும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 750 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என மலையக தொழிற் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

தொழிலாளர்களின் சம்பளம் 500 ரூபாவாக அதிகரிக்கப்படும் என முதலாளிமார் சம்மேளனத்துடனான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்கங்களில் ஒன்றான இ.தொ.கா. அறிவித்துள்ளது.

சில தொழிற்சங்கங்களான ஜே.வி.பி. தலைமையிலான அகில இலங்கை தேசிய தோடடத் தொழிலாளர் சங்கம், ஜனநாயக மக்கள் முன்னணி தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், பி. திகாம்பரம் எம்.பி. தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகியன 750 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தியுள்ளன.

# அரச அதிபரின் யுத்த கால மௌனம் இப்போது புரிகிறது என்கிறார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

இறுதிக் கட்டடப் போரின் போது புலிகள் அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்துக் கொண்டதாகவும், அழிவுகளுக்கு காரணமாக இருந்ததாகவும் யாழ். அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் சிவாஜிலிங்கம் தனது காட்டமான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். அரசாங்க அதிபர் என்பவர் இலங்கை அரசின் முகவராகவே மட்டும் இருக்க வேண்டுமேயன்றி உந்துகாலாக இருக்கக் கூடாது என சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

வன்னி அவலங்களை மூடி மறைக்கும் வகையில் அரச அதிபரது அண்மைய உரை அமைந்துள்ளது. வன்னியிலுள்ள பொது மக்களின் எண்ணிக்கை தொடர்பாக இந்திய; இலங்கை அரசாங்கங்கள் முரண்பாடான தகவல்களை யுத்த நேரத்தில் வெளியிட்டிருந்தன. எனினும் ஆயிரம் பேர் சிக்குண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், முல்லைத்தீவின் மேலதிக அரசாங்க அதிபர் மட்டும் 3 இலட்சத்து முப்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்ட 70 ஆயிரம் குடும்பங்கள் வரை அப்பகுதியில் சிக்குண்டிருப்பதாகக் கூறியிருந்தார்.



ஆனால், அதேவேளை, அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரோ மௌனம் காத்து வந்தார். அந்த மௌனத்தின் அர்த்தம் புரிகின்றது. 70 ஆயிரம் மக்களுக்கு மட்டுமான உணவு விநியோகத்தை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவே மௌனம் காத்திருந்தார் போலும் என சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. பிரதிநிதிக்கு...

செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க, உட்பட காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விசாரணை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றையும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கூடிய இந்த அமைப்புகள் எடுத்துள்ளன.

37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புகளை உள்ளடக்கிய சர்வதேச சுதந்திரமான கருத்துக் கூறல் பரிவர்த்தனை அமைப்பு International Freedom Expession Exchange (IFEX) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

## ஜெயலலிதா...

தனக்கு நெருக்கமான பிரபல்யமான வர்த்தகப் பிரமுகருடன் கடந்த 31 ஆம் திகதி மிலிந்த மொறகொட ஹைதராபாத் சென்றிருந்தார்.

ஆந்திரா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஊடாக கொழும்புக்கும், ஜெயலலிதாவுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதே மிலிந்த மொறகொடவின் நோக்கமாக இருந்தது.

மிலிந்த மொறகொடவின் உத்தியோகபூர்வமற்ற இந்த விஜயத்தின் போது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துள்ள போதிலும், இச்சந்திப்புத் தொடர்பில் இருதரப்பினரும் உத்தியோகபூர்வமாக கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை.

# லசந்தவின் கொலைக்கு அரசே முழுப்பொறுப்பு

## அடித்துக் கூறுகிறார் மனைவி

(கொழும்பு)

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்த கொலைக்கு அரசே பொறுப்பு என்று லசந்த விக்கிரமதுங்கவின் மனைவி தெரிவித்துள்ளார்.

லசந்த விக்ரமதுங்க மகிந்த அரசு பொதுமக்களை கொல்வதையும் மருத்துவமனைகள் மீது விமான தாக்குதல் நடாத்துவதையும் பகிரங்கமாக ஊடகத்தில் எழுதி வந்ததாக லசந்தவின் மனைவி சுட்டி காட்டி உள்ளார்.

கடந்த 10 வருடமாக பத்திரிகையாளரின் கொலைகளை இலங்கை அரசு விசாரனைகள் இல்லாமல் மறைத்து வருவதாகவும் தனது கணவர் உயர் பாதுகாப்பு வலயத்தில் விமான படை தளத்திற்கு அருகில் 8 ஆயுததாரிகளால் 4 மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சுற்றிவளைத்து கொலை செய்ததாக தெரிவித்தார். இந்த கொலை அரசாங்கத்தால் மேற்கொள்ளபட்டமை அவர் உறுதிபட தெரிவித்தார்.

## ஆளும் கட்சியுடன்...

உறுப்பினராகவே நான் தற் போதும் உள்ளேன். ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்டவன் என்ற வகையில் மாநகரசபையில் ஆளும் கட்சி மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள் போன்ற நல்ல காரியங்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின் றேன்.

நான் மாநகரசபை உறுப்பினர் நிஷாந்தனுக்கு எதிராக கையொப்பம் இட்டதனை உறுதிப்படுத்தினால் உறுப்பினர் பதவி, சட்டத்தரணி பதவி என்பனவற்றைத் துறக்கத் தயாராகவே உள்ளேன்.

ஆளும் கட்சிக்கு நான் தாவி விட்டதாகச் செய்தியைப் பிரசுரித்த குடநாட்டுப் பத்திரிகையில் முன்னர் தவறாகப் பிரசுரமான செய்திகளை நான் சுட்டிக் காட்டியதற்கு பழிவாங்கும் முகமாகவே என்மீது சேறுபூசும் இதுபோன்ற செய்திகள் பிரசுரமாகின்றன.

இவ்வாறான செயற்பாட்டை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (கா)

## நீதித்துறையில்...

கட்டியெழுப்பவும், நீதி நிர்வாகத்தில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணவும் பாடுபட்டு வருவதால், வலிமையான, சுதந்திரமான அமைப்புகளை உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஒரு தெளிவான தகவலை அனுப்பும்படி தாம் இலங்கை அரசாங்கத்திடம் அழைப்பு விடுவதாக அவ்வமைப்பின் உப தலைவர் கோரல் தெரிவித்தார்.

இதேவேளை 17 ஆம் திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தவும், சட்டரீதியான கவுன்சிலை மீள நிறுவவும் அரசாங்கம் தொடர்ந்தும் தவறுவதால் இது பொதுமக்களின் நம்பிக்கையைக் குறைக்கும் எனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.